மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 10 சுற்றம் : 12 / டிசம்பர் 2020 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-



# உழவர் போர் வெல்லட்டும்




## ஆசிரியருக்கும்-மாணவருக்கும் ஒரே நாளில் ஒரே விருது!



## தமிழ்வழிக் கல்வியில் படித்தவர்களுக்கு இடஒதுக்கீடு


வலைத் தளத்தில்
வாழ்வியல்
சொல்லும்
களம்...
பாருங்கள்!
முற்றம்
MUTRAM TV
இணைய தொலைக்காட்சி

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly December 2020

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி**
இணை ஆசிரியர்
பேராசிரியர் **அப்பாத்துரை**
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**சைதை மணிமாறன்**
**தமிழரசு** மதுரை
**செபாஸ்டின்** திருச்சி
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**ஆ.சிரோன்மணி**
**முருகன் தேவேந்திரன்**
**ஜான்ஜெனோவா ஜெர்லின்** திருச்சி
**ராஜா சாக்ரட்டீஸ்** தஞ்சை
**அ. இரா. முல்லைக்கோ** பெங்களூர்
நிர்வாகம்
**மணிகண்டன்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**ஆபிரகாம் லிங்கன்**
அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச : 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

உழவர் போர் வெல்லட்டும்
- தலையங்கம்.......... 4

புதுச்சேரி மட்டைப்பந்து அணியில் புறக்கணிக்கப்படும் தமிழர்கள்
- க. சந்திரன் - இரமேசு.......... 5

விருதிலும் வேறுபாடு
- இரா. முல்லைக்கோ.......... 8

நாடகக் கொட்டாய் முதல் சினிமாக் கொட்டாய் வரை (10)
- பூவை தயா.......... 10

ஏமாறாதீர்.......... 12

சுயாட்சி - பிரிவினையாகுமா?
- மா.பொ.சி.......... 14

திட்டமிட்டு மத சுதந்திரத்தை மீறுகிறதா?.......... 16

குறட்டை.......... 17

மகா க(காவி) வி பாரதியார்? பார்ப்பன வெறி பிடித்த பாரதி
- குடியரசு (17.10.1937).......... 18

நலமுடன் வாழ.......... 21

தமிழ்வழிக்கல்வியில் படித்தவர்களுக்கு இடஒதுக்கீடு ..........23

பார்ப்பன மக்கள் தொகை.......... 24

சங்கிகளே தொட்டுப்பார்
- ஞா. புனித அரசு.......... 25

பேரறிவாளன் முன் விடுதலைக்கு ஆளுநரை நேரில் சந்தித்து முதல்வர் வலிறுத்தவேண்டும்
- கி. வெங்கட்ராமன் ..........28

பஞ்சாப் உழவர் போர் பாடமாகட்டும்
- த.தே.த. கண்ணோட்டம் ..........32

ஆசிரியருக்கும் மாணவருக்கும் ஒரே நாளில் ஒரே விருது
- கவிபாஸ்கர்.......... 33

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. *- ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# உழவர் போர் வெல்லட்டும்

விவசாயிகளின் போராட்டம் மிகப் பெரிய அளவில் பேருருவாக எழுந்து நிற்கிறது. தென் இந்தியாவைவிட வட இந்தியப் பகுதிகளில் வாழ்கிற விவசாயிகள் முழு மூச்சாக, இந்திய ஒன்றிய அரசு கொண்டு வந்த, தங்களுக்கு எதிரான சட்டங்களை எதிர்க்கிறார்கள். நாடு தழுவிய கடையடைப்பையும் நடத்தியிருக்கிறார்கள்.

அரசமைப்புச் சட்டம் ஏழாவது தொகுப்பில் பட்டியல் இரண்டில் பதினான்காவது பத்தியில் விவசாயம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதில் விவரித்துள்ளபடி பார்த்தால் இந்த வேளாண் சட்டங்கள் கூட்டாட்சித் தத்துவம், பன்மைத்துவம் ஆகியவற்றை முற்றாக் புறந்தள்ளிவிட்டு கொண்டு வரப்பட்டது என்றும் இந்த நடவடிக்கை கூட்டாட்சித் தத்துவத்தின் மீதான காட்டுத்தனமாக தாக்குதல் என்றும் முன்னாள் அனைந்திந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் கூறுகிறார்கள்.

மிகவும் அலசி ஆராய்ந்து விவாதிக்கப்பட வேண்டிய வேளாண் சட்டங்களை விவசாயிகள் கருத்தறியாமல் நாடாளுமன்றத் தேர்வுக்குழுவின் பரிசீலனைக்கும் கூட வைக்காமல் அவசர கோலத்தில் கொண்டுவந்துள்ளார்கள். மாநிலங்களவையில் குரல் வாக்கெடுப்பு முறையில் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. காசுமீரம் சிறப்புச் சட்டம் 370 நீக்கம், குடியுரிமைச் சட்டத்திருததம், பணமதிப்பிழப்புச் சட்டம் ஆகியவற்றைப் போல இந்த வேளாண் சட்டங்களும் ஜனநாயக நெறிமுறைகளைப் புறந்தள்ளிக் கொண்டுவரப்பட்டுள்ளன. இப்படித்தான் கொரோனா கால ஊரடங்க அலங்கோலமாக அமல்படுத்தப் பட்டது. இந்த அரசு மூர்க்கத்தனமாகச் செயல்படுகிறது என்று மேலும் அவர்கள் கூறுகிறார்கள்.

நிலங்களைக் கையகப்படுத்தி அம்பானி, அதானிக்கு கொடுப்பதற்கும், வேளாண் விளை பொருட்களை மொத்தமாக அவர்களுக்குக் கொடுப்பதற்கும், அவர்கள் வேண்டுவதையெல்லாம் செய்து கொடுத்து, தேர்தல் காலங்களிலும் தங்களுக்குத் தேவைப்படும் காலங்களிலும் அவர்களிடம் இருந்து பொருளாதாரத்தை பெற்றுக்கொள்ளும் நவீன ஊழலை ஆளும் இந்திய ஒன்றிய அரசு செய்து கொண்டிருக்கிறது என்ற ஐயம் நாட்டில் உள்ள பலருக்கும் தோன்றத் தொடங்கியிருக்கிறது. நாட்டு மக்கள் நலமடைய வேண்டும் என்பதல்லாமல் ஓரிருவர் உலகப்பணக் காரர்களாக ஆவதற்கும், தேவைப்படும் நேரத்தில் தாங்கள் மட்டும் அவர்களிடம் இருந்து நிதி பெற்றுக் கொள்வதற்குமே பல சட்டங்களை இந்திய ஒன்றிய அரசு இயற்றிக் கொண்டிருக்கிறது என்பதையும் பல நடுநிலையாளர்கள் வருத்தத்துடன் தெரிவிக்கின்றனர்.



# புதுச்சேரி மட்டைப்பந்து அணியில் புறக்கணிக்கப்படும் தமிழர்கள்!

**க.சந்திரன்**

**செயலாளர், புதுச்சேரி பாரதிதாசன் மட்டைப்பந்து வீரர்கள் சங்கம்**

*புதுச்சேரியும், காரைக்காலும் தமிழர்கள் காலங் காலமாக வாழ்ந்து வரும் வரலாற்றுத் தாயகங்கள். கேரளாவிலிருக்கும் மாகே, ஆந்திரத்திலி ருக்கும் யானம் ஆகிய பகுதிகள், புதுச்சேரி ஒன்றியப் பகுதியின் மாவட்டங் களாகப் பிணைக்கப்பட்டிருந்தாலும்கூட, மக்கள் தொகையில் புதுச்சேரி ஒன்றியப் பகுதியில் வசிக்கும் தமிழர்கள் 94 விழக்காட்டினர்!*

*எனவே, புதுச்சேரியின் கல்வி - தொழில் - வணிகம் என அனைத்திலும் தமிழர்களே பெரும்பங்கு வகிக்க வேண்டுமென எதிர்பார்ப்பது இயற்கையான நீதியாகும். ஆனால், இந்த இயற்கை நீதி தொடர்ந்து மீறப்பட்டு வருகின்றது. அதற்கு இந்திய அரசு உடந்தையாகவும் இருக்கிறது!*

*தற்போது, வேலை வாய்ப்பு - தொழில் - வணிகம் போன்றவற்றைத் தாண்டி, புதுச்சேரி இளைஞர்களின் விளையாட்டு உரிமையும் அயலார் ஆதிக்கத்தால் பறிக்கப்படுகிறது.*

*புதுச்சேரி மட்டைப்பந்து (கிரிக்கெட்) அணியில் தொடர்ந்து வட மாநிலத்தவர்களே விளையாட்டு வீரர்களாக களமிறக்கப்படுகின்றனர். மக்கள் தொகையில் 94 விழுக்காடு இருந்தும்கூட, மண்ணின் மக்களான தமிழர்கள் புதுச்சேரி அணியில் சேர்த்துக் கொள்ளப் படாமல் திறமை இருந்தும் புறக்கணிக்கப்படுகின்றனர். இந்த அநீதி காலங் காலமாக நடந்து வருகின்றது.*



சந்திரன் இரமேசு

*கடந்த 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடந்த விஜய் ஹசாரே கோப்பைக்கான மட்டைப்பந்து போட்டியில் பங்கெடுக்க 15 பேர் கொண்ட புதுச்சேரி அணி அறிவிக்கப்பட்டது. அதில் 11 பேர் இந்திக்காரர்கள் உள்ளிட்ட வெளி மாநிலத்தவர் ஆவர். இதுகுறித்த ஆவணங்களை நாம் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு (பி.சி.சி.ஐ.) அளித்தப் பிறகு, அது மெய்ப்பிக்கப்பட்டு அவர்களில் 8 பேரின் ஆவணங்கள் முற்றிலும் போலியாக இருந்ததால் அவர்கள் அணியிலிருந்தே நீக்கப்பட்டனர்.*

*இதுபோல், 2019ஆம் ஆண்டு 8 வெளி மாநில வீரர்கள் புதுச்சேரி அணியிலிருந்து புகாரின் பேரில் நீக்கப்பட்டனர். இதேபோல், அனைத்திந்திய அளவில் மாநிலங்களுக்கு இடையிலான இரஞ்சிக் கோப்பை மற்றும் அனைத்து ஆண் மற்றும் பெண்களுக்கான 14 வயது, 16 வயது, 19*

வயது, 23 வயது மற்றும் சீனியர் அணிகளில் தொடர்ந்து வெளி மாநில வீரர்களுக்கு புதுச்சேரி அணியில் வாய்ப்பு அளிக்கப்பட்டது. இதுகுறித்து தொடர்ந்து செய்திகள் வந்து கொண்டுள்ளன. நாமும் எதிர்ப்பை பதிவு செய்து கொண்டே வருகிறோம்.

இலட்சக்கணக்கில் பணம் வாங்கிக் கொண்டு, புதுச்சேரி மட்டைப்பந்து அணியில் வெளி மாநில வீரர்களை அமர்த்துகின்ற முறைகேட்டை "கிரிக்கெட் அசோசியேசன் ஆப் பாண்டிச்சேரி" (CAP) என்ற தனியார் சங்கம் தொடர்ந்து செய்து வருகிறது.

சென்னையில் "சியேச்சம் டெக்னாலஜிஸ்" என்ற வயர் உற்பத்தி நிறுவனத்தை நடத்திவரும் தாமோதரன் என்பவர், புதுச்சேரி - சேதராப்பட்டில் அந்நிறுவனத்தின் தொழிலகத்தை நிறுவியுள்ளார். தனது மகனுக்கு தமிழ்நாடு மட்டைப்பந்து அணியில் வாய்ப்பு மறுக்கப்பட்ட நிலையில், கடந்த 2003ஆம் ஆண்டு புதிதாக அவர் தொடங்கியதே "கிரிக்கெட்டி அசோ சியேசன் ஆப் பாண்டிச்சேரி" என்ற சங்கமாகும்.

தனது "சியேச்சம்" தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வரும் அதிகாரிகளையும், தனது குடும்ப உறுப்பினர் களையும் வைத்துத்தான் இச்சங்கத்தை அவர் தோற்று வித்தார். இச்சங்கத்தின் வாழ்நாள் உறுப்பினர்கள் என அவர்களது இணையத்தளமே தெரிவிக்கும் 13 பேரில் பெரும்பாலோர், தாமோதரனின் குடும்ப உறுப்பினர் களும், இதே சியேச்சம் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்துவரும் ஊழியர்களே ஆவர்.

கடந்த 2018ஆம் ஆண்டு, பி.சி.சி.ஐ. அமைப்பால் தகுதி நீக்கம் செய்யப்பட்ட புதுச்சேரி அணிக்கு தாமோதரனின் மகன் ரோகித் தான் தலைவராக (கேப்டன்) அமர்த்தப் பட்டார். அவர் ஏற்கெனவே பலமுறை, தமிழ்நாடு அளவில் நடந்த பல போட்டிகளில் வெவ்வேறு அணிகளில் பங்கெடுத்தவர் ஆவார். எனவே, புதுச்சேரி மாநில அணியில் அவர் விளையாடுவதற்குத் தகுதி யற்றவர் ஆவார். எனினும், தாமோதரன் தொடர்ந்து தனது மகனை சங்கத்திலும், இச்சங்கத்தின் சார்பில் அங்கீகரிக்கப் படும் புதுச்சேரி அணியிலும் சட்டவிரோதமாகச் சேர்த்து வருகிறார்.

தற்போதுகூட, இச்சங்கத்தின் தலைவராக உள்ள ஜி.எம். அருண்குமார் என்பவர் தாமோதரனின் சியேச்சம் நிறுவனத்தின் செயல் இயக்குநராகப் பணிபுரிந்து வருபவர். சங்கத்தின் பொருளாளராக உள்ள எல்.எஸ். தீபிகா என்பவர் தாமோதரன் நிறுவனத்தின் கணக்குப் பிரிவு மேலாளராகப் பணியாற்றுகிறார். இதுபோல் தாமோ தரனின் "கிரிக்கெட்டி அசோசியேசன் ஆப் பாண்டிச்சேரி" சங்கத்தின் முகாமையான உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் சியேச்சம் என்ற அவரது தனியார் நிறுவன ஊழியர்களாகவே உள்ளனர்.

தற்போது, புதுச்சேரியின் துத்திப்பட்டு கிராமத்தில் அரசு நிலத்தையும், நீர்நிலைகளையும் ஆக்கிரமித்து சியேச்சம் நிறுவனம் கட்டியுள்ள தனியார் கிரிக்கெட் மைதானத்துடன் தான், "புரிந்துணர்வு" ஒப்பந்தம் போட்டுக் கொண்டு, "கிரிக்கெட்டி அசோசியேசன் ஆப் பாண்டிச்சேரி" அங்கு விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது.

முறைகேடாக சங்கம் நடத்துவதோடு, தன்னிச்சை யாக செயல்பட்டு வந்த இச்சங்கம் மற்றும் மைதானம் குறித்து நாம் தொடர்ந்து வினா எழுப்பி வந்த நிலையில், கடந்த 12.11.2020 அன்று, இவ்விளையாட்டு மைதானம் ஆக்கிரமிப்புகளால் கட்டப்பட்டது என்பதை புதுச்சேரி துணை நிலை ஆளுநரின் ஆணையின்பேரில் புதுச்சேரி மாவட்ட நிர்வாகம் உறுதி செய்தது. உடனடியாக, இம்மைதானத்திற்கான மின்சார வசதியும், குடிநீர் வசதியும் புதுச்சேரி அரசால் நிறுத்தப்பட்டது. ஆக்கிரமிப்புகளை இடிக்க வேண்டுமெனவும் சியேச்சம் நிறுவனத்திற்கு புதுச்சேரி அரசு ஆணையிட்டுள்ளது.

இத்தனைக்கும் அம்மைதானத்தில் அப்போது நடைபெற்று வந்த ட்வென்ட்டி ட்வென்ட்டி கிரிக்கெட் போட்டியை தொடங்கி வைத்தவர் வேறு யாருமல்ல - புதுச்சேரி முதல்வரும், அவரது அமைச்சர்களும் ஆவர்! ஆனால், அந்தப் போட்டிகள் முடிவடைவதற்குள் அம்மைதானமும் தடை விதிக்கப்பட்டு, போட்டிகளும் கைவிடப்பட்டது அங்கு நடந்து வரும் முறைகேடுகளின் வெளிப்பாடாகும்.

புதுச்சேரியில் கிரிக்கெட் வளர்ச்சிக்காக கடந்த 1968இலிருந்து செயல்பட்டு வந்த புதுச்சேரி மட்டைப் பந்து சங்கம் (புதுவை கிரிக்கெட் அசோசியேசன்) என்ற அமைப்புக்குப் போட்டியாகவே, தாமோதரனின் தனியார் கிரிக்கெட் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அதன்வழியே, வெளி மாநிலத்தவரின் ஆதிக்கம் கிரிக்கெட் போட்டிகளில் கொடிகட்டிப் பறக்கிறது.

கடந்த 2013ஆம் ஆண்டு வெளியான ஐ.பி.எல். விளையாட்டுப் போட்டி ஊழல்கள் குறித்து விசாரித்த உச்ச நீதிமன்றம் பி.சி.சி.ஐ. அமைப்பை சீர்திருத்தம் செய்வதற்காக லோதா குழுவை அமர்த்தியது. அதன் பரிந்துரைகள் 2016இல் உச்ச நீதிமன்றத்தில் அளிக்கப் பட்டன. அதன் பரிந்துரைகளில் ஒன்று, இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் தனித்தனி கிரிக்கெட் அணிகள் அமைக்கப்பட வேண்டுமென்பதும், அந்த அணிகளுக்கு வாக்களிக்கும் உரிமை இருக்க வேண்டும் என்பதும்! அதன்படி, புதுச்சேரி மாநிலத்திற்கு தனி அணி அமைக்கும் வாய்ப்பு உருவானது. அதுபோல் 9 புதிய அணிகள் பி.சி.சி.ஐ.இல் சேர்க்கப்பட்டன.

தொடர்ந்து செயல்பட்டு வருகிறோம் என்பதாக பல போலி ஆவணங்களை அளித்தும், வேறு வழியில் "கவனித்தும்" புதுச்சேரி கிரிக்கெட் அணிக்கான அங்கீகாரத்தை - ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டி ருந்த புதுச்சேரி கிரிக்கெட் சங்கத்திற்கு பதிலாக, தாமோதரனின் தனியார் சங்கம் பி.சி.சி.ஐ.யிடமிருந்து பெற்றது. புதுச்சேரி அரசியல்வாதிகள் பலரும் தாமோதரனின் சங்கத்துடன் இணக்கமாக இருந்தனர்.

ஏற்கெனவே புதுச்சேரியில் இயங்கிவரும் "பாண்டிச்சேரி கிரிக்கெட் அசோசியேசன்" என்ற சங்கத்திற்குப் பதிலாக, தாமோதரனின் இந்த புதிய சங்கத்தை புதுச்சேரி அரசின் விளையாட்டு நலத்துறை எதன் அடிப்படையில் அங்கீகரித்தது என தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நாங்கள் கேள்வி கேட்டோம். அதற்கு, புதுச்சேரி முதலமைச்சர் நாராயணசாமி மற்றும்

அமைச்சர்கள் பலர் வாய்மொழியில் ஆணையிட்டதின் பேரில் அங்கீகரித்தது என்று புதுச்சேரி அரசு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கூச்சமின்றி பதில் அளித்தது. அதேபோல், லோதா குழுவிடம் இந்த சங்கத்தை அங்கீகரிக்கும்படி முதலமைச்சர் நாராயணசாமி 2017இல் தனியே ஒரு பரிந்துரைக் கடிதமும் வழங்கினார். தாமோ தரனின் சங்கத்திற்கு புதுச்சேரி அரசும், அரசியல்வாதி களும் எந்த அளவில் உடந்தையாக இருந்துள்ளனர் என்பதையே இது காட்டுகிறது.

தாமோதரனின் தனியார் சங்கம், பல இலட்சக் கணக்கில் பணம் பெற்றுக் கொண்டு புதுச்சேரி அணியில் விளையாட வெளி மாநிலத்தவரை தொடர்ந்து போலிச் சான்றிதழ்கள் வழியே அனுமதித்து வருகிறது. இது குறித்து, புதுச்சேரி காவல்துறை உயரதிகாரிகள் மற்றும் புதுச்சேரி அரசு ஆகியவற்றிடம் நாம் தொடர்ந்து அவ்வப்போது புகார் அளித்து வந்துள்ளோம்.

கடந்த 2019ஆம் ஆண்டு போலியான ஆவணங்கள் தயாரித்து 19 வயதுக்குட்பட்ட விளையாட்டில் வட மாநில வீரர்களை இதேபோல் புதுச்சேரி அணியில் விளையாட வைத்தனர். இதுகுறித்து, புதுச்சேரி ஆளுநரிடம் புகார் அளித்தோம். ஆளுநர் அமர்த்திய விசாரணைக் குழு, அந்த வட மாநில வீரர்கள் அனைவருமே அரியாங்குப்பத்தில் செயல்பட்டு வரும் “செந்தில் நர்சிங் கோசிங் சென்டர்” என்ற பயிற்சிப் பள்ளியில் படித்தவர்கள் எனத் தெரியவந்தது. அங்கு சென்று பார்த்தால், அப்படியொரு பயிற்சிப் பள்ளியே இல்லை!

இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த ஆளுநரின் விசாரணைக் குழு, தாமோதரனின் தனியார் சங்கத்தின் மீது பி.சி.சி.ஐ.யிடம் புகார் அளித்தது. இதனையடுத்து, அந்த வட மாநில வீரர்கள் 8 பேரும் இந்தியாவில் வேறெங்கும் விளையாட முடியாதபடி தடை விதிக்கப் பட்டனர்.

புதுச்சேரியின் கிரிக்கெட் வளர்ச்சிக்காக ஆண்டு தோறும் சற்றொப்ப 25 கோடி ரூபாய் நிதி பி.சி.சி.ஐ. அமைப்பால் ஒதுக்கப்படுகிறது. இத்தொகையைக் கையாளும் தாமோதரனின் “கிரிக்கெட் அசோசியேசன் ஆப் பாண்டிச்சேரி” - தனியார் சங்கம், அத்தொகையை வைத்து தனது சொந்த சியேச்சம் நிறுவனத்துடனேயே ஒப்பந்தம் போட்டுக் கொள்வதும், தனது மகனை அணியில் விளையாட வைப்பதும், புதுச்சேரி மண்ணின் மைந்தர்களை புறக்கணிப்பதும் சகிக்க முடியாத ஊழல் ஆகும்!

ஒரு மட்டைப்பந்து வீரர் புதுச்சேரி அணியில் ஒரு ஆண்டு முழுவதும் விளையாடினால் அவருக்கு 20 இலட்சத்துக்கும் மேல் வருமானம் கிடைக்கும். 23 வயதுக்கு உட்பட்டவர்கள் விளையாடினால் 12 இலட்சத்துக்கு குறையாமலும், 19 வயதிற்கு உட்பட்ட அணிகளில் விளையாடினால் 7 இலட்சத்துக்கு மிகாமலும் வருமானம் கிடைக்கும். அதுமட்டுமின்றி நன்றாக விளையாடினால் அவருக்கு இந்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களும், தனியார் பெருநிறுவனங்களும் வேலை வாய்ப்பளிக்கின்றன.

எனவேதான், இதைக் கருத்தில் கொண்டு, வெளி மாநிலத்தவர்கள் பல இலட்சம் செலவு செய்து இங்கு வந்து விளையாட வருகிறார்கள். அந்த அநீதிக்கு, “கிரிக்கெட் அசோசியேசன் ஆப் பாண்டிச்சேரி” போன்ற சங்கங்கள் துணை புரிகின்றன. இதனால் புதுச்சேரியில் மண்ணின் மைந்தர்களான தமிழர்கள் புறக்கணிக்கப் படுவதும், அவர்களது வாய்ப்புகள் பறிபோவதும் நடந்து கொண்டுள்ளது. “கிரிக்கெட் அசோசியேசன் ஆப் பாண்டிச்சேரி” சங்கத்திலுள்ள இராமன் சிங், இராசீவ் மேத்தா போன்ற வட மாநிலத்தவர்கள், இச்சங்கத்தின் வழியே வட மாநிலத்தவர்கள் உள்ளே நுழைவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துத் தருகின்றனர்.

சங்கத்தின் செயலாளர் மற்றும் துணைச் செயலாளர் போன்ற இரு பொறுப்புகளில் மட்டும் புதுச்சேரி தமிழர்களை அமர்த்திவிட்டு, ஒட்டுமொத்தமாக வெளி மாநிலத்தவர் ஆதிக்கத்திற்காகவே இச்சங்கம் நடத்தப் படுகின்றது.

எனவே, இவ்வளவு முறைகேடுகளுடன் வெளி மாநிலத்தவருக்காகவே நடத்தப்படுகின்ற “கிரிக்கெட் அசோசியேசன் ஆப் பாண்டிச்சேரி” சங்கத்தை புதுச்சேரி அரசு தடை செய்ய வேண்டும். புதுச்சேரி அரசு மற்றும் விளையாட்டுத் துறையின் முழுமையான மேற்பார்வை மற்றும் கண்காணிப்பில் புதிய மட்டைப்பந்து அணியை உருவாக்கி, புதுச்சேரியில் தொடர்ந்து 25 ஆண்டுகளாக வசிக்கும் தமிழர்களுக்கே அதில் 90 விழுக்காட்டு இடங்களை அளிக்க வேண்டும்.

கடந்த 2018ஆம் ஆண்டு முதல், “புதுச்சேரி பாரதிதாசன் பாண்டிச்சேரி கிரிக்கெட் சங்கம்” என்ற அமைப்பை ஏற்படுத்தி, இச்சிக்கல் குறித்து புதுச்சேரி அரசிடம் பலமுறை புகார் அளித்தும், போராட்டம் நடத்தியும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளோம். தமிழ்த்தேசியப் பேரியக்கம், நாம் தமிழர் கட்சி போன்ற தமிழ் அமைப்புகள் எங்கள் போராட்டத்திற்கு துணை நிற்கின்றன. குறிப்பாக, இச்சிக்கல் குறித்து கேள்விப் பட்டவுடன் எங்களுடன் உடன் நின்று வழிகாட்டிய நாம் தமிழர் தொழிலாளர் நலச்சங்கச் செயலாளர் திரு. த. இரமேசு அவர்களையும், புதுவை போராளிகள் குழுவினரையும், ரவுடிகள் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று காவல்துறையிடம் திமிரோடு புகார் அளித்தது “கிரிக்கெட் அசோசியேசன் ஆப் பாண்டிச்சேரி” சங்கம்! ஆனால், இன்று இச்சிக்கல் மக்கள்மயமாகி உள்ளது.

புதுச்சேரி மாநிலத்தின் சார்பில் விளையாடும் மட்டைப்பந்து அணியில், 90 விழுக்காட்டு இடங்கள் தமிழர்களுக்கே வழங்கப்பட வேண்டும்! அதை உறுதி செய்யும் வகையில், ஊழல் சங்கத்தைத் தடை செய்து, புதுச்சேரி அரசு தனி மட்டைப்பந்து விளையாட்டு வீரர்களின் சங்கத்தை உருவாக்கி, புதுச்சேரி தமிழர்களின் உரிமையைக் காக்க வேண்டும்! ●

**இரா.முல்லைக்கோ**
பெங்களூரு

உலகில் பல்வேறு நாடுகள் பல்வேறு அரிய சாதனை நிகழ்த்திய ஆன்றோர்கள், அறிஞர்கள், அறிவியலாளர்களுக்கு அவர்களின் சாதனையைப் பாராட்டி மகிழ்வுறும் வகையில் பரிசும் விருதும் வழங்கி சிறப்பிப்பதை மரபாகக் கொண்டுள்ளனர்.

**விருதுகளின் வகை:** அரிய பெரும் விருதுகளாக நோபல் விருது, கின்னஸ் விருது, வாழ்நாள் சாதனை யாளர் விருது, அறிவியல் கண்டுபிடிப்பாளர் விருது, பாரதரத்னா விருது, பத்மசிறி, பத்மபூசன் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

**விருதின் நோக்கம்:** இந்திய பாரத ரத்னா அல்லது மாமணி இந்திய ஒன்றியத்தில் வழங்கப்படும் மிக உயர்ந்த விருதாகும். மிகச் சிறந்த தேசியச் சேவை ஆற்றியவர்களைப் பாராட்டி பாரத ரத்னா விருது வழங்கப்படுகிறது. இச்சேவை கலை, அறிவியல், இலக்கியம், கலாச்சாரம், விளையாட்டு மற்றும் பொதுச் சேவை ஆகிய துறைகளை உள்ளடக்கி இருக்கிறது. எனினும் பிறதுறைகளில் உள்ளவர்களுக்கும் இவ்விருதை வழங்கும் வகையில் நவம்பர் 2011இல் விதிகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. பாரத ரத்னா என்பது இந்தியாவின் இரத்தினம் எனப் பொருள்படும்.

**விருதின் வடிவமைப்பு:** 1954ஆம் ஆண்டு நிறுவப் பட்ட தேசிய விருதானது, பதக்கத்தில் அரச மர இலையில் சூரியன் உருவமும் 'பாரத ரத்னா' என்ற சொல் தேவநாகரி எழுத்துக்களில் பொறிக்கப் பட்டிருக்கும். இவ்விருதுக்கான முதல் வரையறையில் 35 மி.மீ விட்டமுடைய வட்ட வடிவான தங்கப் பதக்கமாகும். பதக்கத்தின் பின்புறம் அரசு முத்திரையும் இருக்கும். இப்பதக்கத்தை வெள்ளை ரிப்பனில் இணைத்து விருதாளர்களின் கழுத்தில் அணிவிப் பார்கள். அரசமரம் புத்தருக்கு அறிவைத் தூண்டிய இடமாகும்.

**முதல் விருதாளர்கள்:** 1954 ஆம் ஆண்டு சட்டப் படி இவ்விருதை இறந்தவர்களுக்கு வழங்க இயலாது. இவ்விருது அண்ணல் காந்தி அவர்களுக்கு வழங்கப் படாத திற்கு இது ஒரு காரணமாக இருக்கலாம். முதல் விருது இந்திய கவர்னல் ஜெனரல் சி.இராசகோபாலச் சாரிக்கும் விஞ்ஞானி சி.வி.இராமன், குடியரசுத் தலைவர் சர்வ பள்ளி இராதாகிருட்டிணன் ஆகியோர் களுக்கும் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டுள்ளது. இறுதியாக மேனாள் பிரதமர் வாஜ்பாயிக்கு அளிக்கப் பட்டது.

**விருதும் விதியும்:** 1955 ஆம் ஆண்டு சட்டப்படி இறந்தவர்களுக்கும் இவ்விருதினை வழங்க வழிவகை செய்யப்பட்டது. வெளிநாட்டில் பிறந்து இந்தியக் குடியுரிமை பெற்ற அன்னை தெரசாவுக்கு 1980ஆம் ஆண்டில் விருது வழங்கப்பட்டது. இவரைத் தவிர இரு இந்தியரல்லாதவர்களான கான் அப்துல் கபார் கானுக்கு 1987ஆம் ஆண்டிலும் நெல்சன் மண்டே லாவுக்கு 1990ஆம் ஆண்டிலும் இவ்விருது வழங்கப் பட்டுள்ளது. 1992 ஆம் ஆண்டில் சுபாஷ் சந்திர போசின் மறைவுக்குப் பின் அவருக்கு வழங்கப்பட்ட இவ்விருது சட்டச் சிக்கல்கள் காரணமாக திரும்பப் பெறப்பட்டது. விதி 18(1) இன்படி விருது பெற்றோர் தங்களின் பெயருக்கு முன்போ, பின்போ பாரத ரத்னா



# விருதிலும் வேறுபாடு

அடைமொழியைப் பயன்படுத்தக்கூடாது. அவசியம் கருதினால் 'பாரத ரத்னா விருது பெற்றவர்' என்ற சொற்றொடரைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**விருதாளர்கள்:** பாரத ரத்னா விருது சி.இராஜ கோபாலச்சாரி, சி.வி.இராமன், சர்வபள்ளி இராதா கிருட்டிணன், பகவான்தாஸ், விசுவேசுவரய்யா, ஜவகர்லால் நேரு, கோவிந்த் வல்லப் பந்த், தோண்டோ கேசவ் சார்வே, பிதான் சந்திரராய், புருசோத்தம் தாசு தாண்டன், இராஜேந்திரப் பிரசாத், சாகிர் உசேன், பாண்டுரங்கவாமன் காணே, லால்பகதூர் சாஸ்திரி, இந்திராகாந்தி, வி.வி.கிரி, காமராசர், அன்னை தெரசா, வினோபாபாவே, கான் அப்துல் கபார்கான், எம்.ஜி.இராமச்சந்திரன், பி.எம்.அம்பேத்கர், நெல்சன் மண்டேலா, ராஜீவ் காந்தி, வல்லபாய் பட்டேல், மொரார்ஜி தேசாய், அபுல்கலாம் ஆசாத், ஜே.ஆர்.டி. டாட்டா, சத்தியஜித்ரே, குல்சாரிலால் நந்தா, அருணா ஆசஃப் அலி, ஏ.பி.ஜே.அப்துல் கலாம், எம்.எஸ். சுப்புலட்சுமி, சி.சுப்பிரமணியம், ஜெயபிரகாஷ் நாராயணன், இரவிசங்கர், அமர்த்தியாசென், கோபி நாத் போர்டோலாய், லதா மங்கேஷ்கர், பிஸ்மில்லா கான், பீம் சென் ஜோஷி, சி.என்.ஆர்.ராவ், சச்சின் டெண்டுல்கர், மதன் மோகன் மாளவியா, அடல்பிகாரி வாஜ்பாய், பிரணாப் முகர்ஜி, பூபேன் அசாரிகா, நானாஜி தேஷ்முக் ஆகியோர்கள் ஆவர். மேற்காணும் விருதாளர்களில் பெரும் பகுதியினர் விடுதலைப் போராளிகள், முதல்வர்கள், குடியரசுத்தலைவர், பாடகர்கள், திரைப்பட பின்னணியாளர் எனப் பலர் விருதினைப் பெற்றுள்ளனர்.

இதழியல் கண்ணோட்டம்: இந்தியாவின் உயரிய சிவிலியன் விருதுகளின் ஒன்றாக கருதப்படும் 'பாரத ரத்னா' விருது எப்படி பெரும்பாலும் பார்ப்பனர் களுக்கே வழங்கப்படுகிறது என்பது குறித்து தி பிரிண்ட் இணைய இதழில் கண்ணோட்டத்தைப் பார்ப்போம்.

பிற்படுத்தப்பட்டோர்: பி.வி.நரசிம்மராவுக்கும், எஸ்.பி.பாலசுப்ரமணியத்திற்கும் பாரத ரத்னா விருது வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட் டிருக்கும் பின்னணியை ஆராய்வோம். பாரதரத்னா விருது இதுவரை 46 இந்தியர்களுக்கும் இரண்டு வெளி நாட்டினருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த 46 இந்தியர்களில் பெரும்பாலானவர்கள் பார்ப்பனர்கள். விருது வழங்கப்பட்ட 46 பேர்களில் 29 பேர்கள் பார்ப்பனர்கள். ஐந்து பேர்கள் முஸ்லீம்கள், மூன்று பேர்கள் சூத்திரர்கள், தலித், பனியா, கட்ரி, பார்சி, கிறித்தவர் ஆகிய பிரிவைச் சேர்ந்தவர்கள் தலா ஒருவர் விருதினைப் பெற்றிருக்கிறார்கள். கடைசியாக இந்தி விருதைப் பெற்ற பூபேன் ஹஸரிகாவின் சாதி தெரிய வில்லை.

**பெண்விருதாளர்கள்:** இந்த விருதைப் பெற்றி ருக்கும் நான்கு பெண்களில் மூன்று பேர் பார்ப்ப னர்கள். ஒருவர் கிறித்தவர். அதாவது இந்திய மக்கள் தொகையில் மூன்று விழுக்காடு உள்ள பார்ப்பனர்கள் இல்லாவிட்டால் இத்தனை பாரத ரத்னா விருது வழங்கியிருக்க முடியாது.

**பார்ப்பனர் ஆதிக்கம்:** இந்திய மக்கள் தொகை யில் பெரும் பகுதியினர் சூத்திரர்கள், தலித்துகள், ஆதிவாசிகள். ஆனால் அறுபத்துஆறு ஆண்டுகளில் இதுவரை மூன்று பேர்கள் மட்டுமே அந்த விருதினைப் பெற்றிருக்கிறார்கள். 18 விழுக்காடு தலித் மக்கள் தொகையில் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் என்ற சட்டம் இயற்றிய மேதை ஒருவர் மட்டுமே அந்த விருதைப் பெற்றிருக்கிறார். ஆதிவாசி குடிமக்களில் ஒருவரும் அந்த விருதைப் பெற்றதில்லை. 1991 இல் வல்லபாய் பட்டேலுக்கு இந்த விருது வழங்கப்பட்டது. அதற்கு முன்பாக காமராசர், எம்.ஜி.இராமச்சந்திரன் ஆகிய இருவரும் சூத்திரர்களாக அந்த விருதைப் பெற்றிருக் கிறார்கள். 1954இல் இருந்து பாரத ரத்னா விருது வழங்கப்படுவது துவங்கியது. இராஜகோபாலாச்சாரி, சி.வி.இராமன், சர்வபள்ளி இராதா கிருஷ்ணன் ஆகிய மூவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பார்ப்பனர்கள்.

**மறைவுக்குப் பின் விருதுகள்:** இந்த விருதை வழங்க எந்த வரைமுறையும் இருப்பதாகத் தெரிய வில்லை. ஜவகர்லால் நேருவும் இந்திராகாந்தியும் தாங்கள் பிரதமராக இருக்கும்போதே விருதைப் பெற்றுக் கொண்டார்கள். அம்பேத்கருக்கும் வல்லபாய் பட்டேலுக்கும் மறைந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு இந்த விருது வழங்கப்பட்டது. பாரத ரத்னா விருதைப் பெற்றவர்களில் பலர் ஒரு புத்தகத்தைக்கூட எழுதிய தில்லை. அந்த நேரத்தில் மத்தியில் யார் ஆட்சியில் இருக்கிறார்களோ அவர்கள் நினைத்தவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

**விருதில் பாகுபாடு:** அண்ணல் அம்பேத்கரும், நெல்சன் மண்டேலாவும் தீண்டாமையையும் ஒடுக்கு முறையையும் எதிர்த்துப் போராடிய தலைவர்கள். சமூக நீதியில் நம்பிக்கை கொண்டிருந்த பிரதமர் வி.பி.சிங் ஆட்சியில் இருந்த போது தான் இவர்களுக்கு விருது வழங்க முடிவு செய்யப்பட்டது. ஆர்.எஸ்.எஸ் ஆல் இயக்கப்படும் பா.ஜ.க 1999, 2014 இல் ஆட்சியில் இருந்த காலங்களில் பிஸ்மில்லாகான், பூபேன்ஹஸரிகா தவிர விருதைப் பெற்ற அனைவருமே பார்ப்பனர்கள். இதுவரை பொதுவுடைமை சித்தாந்தங்களைக் கொண்ட கம்யூனிஸ்ட்டுகளுக்கு விருது வழங்கப் படவே இல்லை. காங்கிரஸ் கட்சி மதச்சார் பற்றவர் களுக்கு இந்த விருதை வழங்கி மகிழ்கிற தென்றால், பா.ஜ.க.பார்ப்பனர்களுக்கு வழங்கி மகிழ்கிறது. இதுபோல ஒரு சாதி மனப்பான்மையோடு செயல்படும் ஒரு நாடு முன்னேறவே முடியாது என்பது உறுதி. விருது வழங்குவதிலும் அரசு இத்தனை வேறு பாடுகளா?

●




# நாடகக் கொட்டாய் முதல்... சினிமாக் கொட்டாய் வரை!

10

'ரோஜாப்பூ' பூவை தயா





சமணம், பௌத்தம், சைவம், வைணவம், இசுலாம், கிறித்தவம் என அனைத்து சமயங்களுக்கும் அழகழகாய் இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டது தமிழ் மொழியாகும். இத்தமிழ் மொழியைக் கொண்டு பன்னிரு ஆழ்வார்கள் வைணவ சமய இலக்கியங் களைப் படைத்த தொகுப்புதான் 'நாலாயிரத் திவ்விய பிரபந்தம். தமிழ் தேனமுதம். வைணவர்கள் பக்தி உணர்வில் ஆழ்ந்து தோய்ந்து பாடியதால் அவர்கள் ஆழ்வார்கள் எனப் பெயர் பெற்றனர் என்பது யாவரும் அறிந்ததே. இந்தப் பன்னிரெண்டு ஆழ்வார்களில் 'ஆண்டாள்' எனும் பெண்பாற் புலவரும் உண்டு.

முதல் மூன்று ஆழ்வார்கள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்களாவார்கள். பொய்கை யாழ்வாரை விடுங்கள்... அதென்ன பூதத்தாழ்வார், பேயாழ்வார்? அப்படியென்றால் பூதமும், பேய் பிசாசும் அக்காலங்களில் நம்பப்பட்டதா?

நான் தந்தை பெரியாரின் கொள்கைகளையும், பாசறையையும் எட்டி நின்று ஏற்றவன். எட்டி நின்று ஏற்றவனுக்கே இந்தப் பேய் பிசாசுகளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இவ்வளவு ஏன், ஓரளவிற்கு இறைவனை நம்பிய நான், இப்போது அந்த நம்பிக் கையை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருக் கிறேன். காரணம்... காலம் காலமாய் நாட்டில் நடக்கும் மிகப்பெரிய கொடிய செயல்களையெல்லாம் இறைவன் தடுத்து நிறுத்தியதாகத் தெரியவில்லை? என்ன இது சிறுபிள்ளைத்தனமான பேச்சு என்றுகூட பலர் எண் ணலாம். என் ஆதங்கம் இது. பெண்களுக்கு எதிராய் நடக்கும் வன்கொடுமைகள் தொடரும் ஒரு கேவல மான நிலை... சிறுமிகள் குழந்தைகள் என வளர்ந்து கொண்டே போகும் இச்செயலுக்கு இந்நாடே தலைகுனியும் ஒரு அவலம். இந்திய மண்ணில் தாயாய் மதிக்கும் பெண்களும், தெய்வமாய்த் திகழும் பெண் குழந்தைகளும் ஏன் இப்படி காமுகர்களால் சிதைக் கப்பட்டு சீரழிக்கப்பட்டுக் கொல்லப்படுகிறார்கள்?

எங்கும் நிறைந்தவன் இறைவன் என்றால் இப்படி ஒரு கொடிய நிகழ்வு நடக்கும் நேரமெல்லாம் அவர் என்ன துயில் கொண்டிருந்தாரா? காக்கும் கடவுளுக்கு இதைவிட வேறு வேலை, துன்பத்தையும் துயரத்தையும் தாங்கிப் பழகியவர்கள் மனிதர்கள். பிறப்பு முதல் இறப்பு வரைகூட பல இன்னல்களை தாங்கிக் கொள்ளும் மனிதர்கள் இம்மண்ணில் நிறைந்தே இருக்கிறார்கள். ஆனால், துயரமும் துன்பமும் வேறு, கொடிய செயல்கள் வேறு என்பதை ஆண்டவன் ஏன் இன்னும் புரிந்து கொள்ளவில்லையென்று எனக்கு நானே கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறேன். தர்மத்திற்கெதிராய் நடக்கும் கொடிய நிகழ்வுகளில பலியாகும் உயிர்கள்... அவர்கள் விதிப்படியே நடக்கிறது என்ற கூற்றை ஆண்டவனே கூறினாலும் ஏற்க இயலாது.

இந்த அண்ட சராசரங்களை ஆட்டிப்படைத்துக் கொண்டிருப்பதும், வாழ்வித்துக் கொண்டிருப்பதும்... நமக்கும் அப்பாற்பட்ட ஒரு ஆற்றல் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டுதானிருக்கிறோம். அந்த மாபெரும் ஆற்றல், தன் ஆற்றலை இழந்து விட்ட தால்தான் நாட்டில் இப்படியெல்லாம் அவலங்கள் அரங்கேறுகிறதோ? பூகம்பங்கள் தோன்றுகின்றதோ? ஆழிப்பேரலை எனும் சுனாமியும் பஞ்சமும் கொரோனா தொற்றும் கொத்துக் கொத்தாய் மனித உயிர்களை பழிவாங்குகிறதோ? இவற்றையெல்லாம் யோசித்துப் பார்க்கையில் கடவுள் இல்லையென்ற முடி விற்கு வந்துவிட வேண்டியதுதான் என்ற எண்ணம் தோன்றும் நேரம்... மனிதனுக்கு நேரும் மரணமும், மனிதக் கூட்டைவிட்டு உயிர் பிரிந்து போகும் அக்கணமும் "நானிருக்கிறேன் மனிதா" எனற ஒரு அசரீரி கேட்பதைப் போல் உள்ளதை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் எல்லோரும் தள்ளப்பட்டிருக் கிறோம். எது எப்படியாயினும் இன்றைய நிலையில் இறைவனை நம்புவதைவிட, மனிதர்களை நம்பலாம். ஒருவருக்கொருவர் தோள்கொடுத்து உன்னதம் காணலாம்.

இதுவரை எழுதிய என் எழுத்திலும் கருத்திலும், நான் ஒரு நிலைப்பாட்டில் இல்லையென்பதை யாவரும் உணரலாம். நான் ஆத்திகனா? நாத்திகனா? என்ற கேள்வி எழும்போது, எந்தக் கொடிய செய லையும், நாம் பெரிதாக நம்பும் ஆற்றல் காத்திட இயலாத போது... நாம் ஏன் அந்த ஆற்றலை நம்ப வேண்டும்? நம்மை விட ஒரு ஆற்றல் இவ்வுலகில் இல்லையென்போம். ஒவ்வொரு மனிதனின் உயர்ந்த குணங்களே அவனுக்கு ஆற்றலாக இருந்து, நல்வழி காட்டும் என்பது என் கருத்து.

கலையுலகத் தொடர்புகளையும், கடந்து வந்த பாதைகளையும் விவரிக்காமல்... எதை எதையோ சொல்லிக் கொண்டிருப்பது ஏன் என்ற எவரும் எண்ண வேண்டாம். என் மனதில் பட்ட கருத்தை எல்லாரோடும் பகிர்ந்து கெண்டேன் அவ்வளவுதான். பலநூறு பக்கங்கள் கெபண்ட ஒரு நூலை நாம் வாசிக்கும்போது, எல்லாப் பக்கங்களும் நம்மைக் கவர் வதில்லை. ஏதோ ஒரு பக்கத்தில் சில பல வரிகள் தீப்பொறியாய் நம்மைச் சுடும், அல்லது நம்மைக் கவரும். அதுபோன்று என் கட்டுரையிலும் எல்லோரையும் கவரும் வண்ணம் ஒரு வரியோ, ஒரு வார்த்தையோ இருக்க வேண்டும் என்ற ஒரு நப்பாசைதான். சிறுவயது முதல் அரசியல் பொதுக்கூட்டங்கள் சென்னைக்குள் எங்கு நடந்தாலும் தவறாமல் செல்வேன். ஆன்மிகச் சொற்பொழிவையும் விட்டு வைக்க மாட்டேன். ஆயினும் ஆன்மிக சொற்பொழிவிற்குச் செல்வதை விரல்விட்டு எண்ணிவிடலாம். இப்படி இரசியல் மேடைப் பேச்சுக்களைக் கேட்டுக் கேட்டு, இலக்கிய அறிவையும் முன்னுக்குப்பின் முரணாகப் பேசவும், ஒன்றிலிருந்து தொடங்கி இன்னொன்றக்குத் தாவி, மீண்டும் தொட்ட இடத்திற்கே வரும் சூட்சமத்தையும் நன்கு கற்றேன். என் எழுத்தை வாசிப்பவர்கள் அதை நன்கு உணரலாம்.

இந்தக் கட்டுரையை ஆழ்வார்களில் தொடங் கினேன் என்றாலும், 'ரோஜாப்பூ' விற்கு ஒரு சின்னத் தொடர்புண்டு. பேயாழ்வார் பூதத்தாழ்வார் என்ற பெயரிலான தொடர்பு என் நண்பர்களில் பலர் என்னை வற்புறுத்தி 'பேயை' மையமாக வைத்து ஒரு நாடகம் எழுதுங்கள் என்று முரண்டு பிடித்தார்கள். எனக்கு பேய், ஆவி இவற்றின் மீது நம்பிக்கையில்லை என்றாலும் நண்பர்களுக்காக எழுதினேன். அந்த நாடகத்தின் பெயர்தான் ரோஜாப்பூ. முற்பகுதி ஆங்கிலப்படத்தின் நகைச்சுவை போலவும் (பார்த்த ரசிகர்களின் கருத்து) பிற்பகுதி 'ஆவி' யை வைத்தும் எழுதி முடித்தேன்.

இந்நாடகத்தை மிகவும் சிறப்பாக அரங்கேற்றிட வேண்டும் என்ற முனைப்பில், நானும் நண்பர் மதுரை கண்ணனும் வாழப்பாடி மூர்த்தியும் கைகோர்த்தோம். நான்கு மாத ஒத்திகை. ஒத்திகை முடிந்த ஒவ்வொரு நாளும் மயிலை லஸ்கார்னரில் உள்ள 'செலக்ட்' ஓட்டல் எதிரே அமர்ந்து தேனீர் அருந்திய வண்ணம், இரவு இரண்டு மணிவரை டிஸ்கசன் செய்வோம். அந்த அளவிற்கு நாடகத்தின் பிறப்குதியில் தந்திரக் காட்சிகள் உள்ளிட்ட பல்வேறு வேலைகள் இருந்தன.

நான் எழுதியதிலேயே இந்த நாடகம் எனக்கு ஒரு சவாலாகவே இருந்தது. அதன் காரணமாய் இதில் நான் கதாநாயகன் வேடம் ஏற்காமல், ஒரு சின்ன கதாபாத் திரத்தில் நடித்தேன். இயக்கத்தில் முழுமையாக கவனம் செலுத்தினேன். 1986இல் மயிலை ரசிக ரஞ்சனி சபாவில் நாடகம் அரங்கேறியது. இடைவேளைவரை படு அமர்க்களம். அதற்குப்பிறகு 'கோமா'வில் படுத்த நோயாளி போல் ஆகிவிட்டது. காரணம், தந்திரக் காட்சிகளில் 'டெக்னிக் வொர்க்' ஏமாற்றிவிட்டது. பொதுவாக நாடகங்களில் பேய், ஆவி, எலும்புக்கூடு போன்ற ஏனைய காட்சிகள் தத்ரூபமாக அமைய 'அல்ராலைட்' என்ற பல்புதான் கைகொடுக்கும். அந்த அல்ட்ரா லைட் வேலை செய்யவில்லை. மாற்று ஏற்பாடும் உடனே செய்ய முடியாத நிலை. ஆக, நாடகம் சோபிக்கவில்லை. எனது உழைப்பும், மதுரை கண்ணன், பாபு, வண்டு ராதா, என் ராஜேந்திரன், அமுதா, வேணி ஆகியோரின் பண்பட்ட நடிப்பும் பயனற்றுப் போனது. எம்ஜியாரின் 'நீதிக்குப்பின்பாசம்' பாதிக்குப்பின் மோசம் என்ற பத்திரிகையின் விமர்சனம் நினைவிற்கு வந்தது.

ஒன்றை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். நாம் செய்யும் எந்த ஒரு செயலையும் யாருக்காகச் செய்தாலும் எதற்காகச் செய்தாலும் அதிலே நமக்கும் ஒரு ஈடுபாடும் ஈர்ப்பும் இருக்க வேண்டும். இல்லை யென்றால், அது எந்த வகையிலும் நமக்கு வெற்றியைப் பெற்றுத் தராது என்பதை இந்த நாடகத்தின்மூலம் நன்கு உணரப் பெற்றேன்.

**பயணம் தொடரும்...**

ஒருவர் 15.20 லட்சம் விலையுள்ள புதிய கார் ஒன்று வாங்கி இருக்கிறார். அதற்கு இன்சூரன்ஸ் என்று இன்வாய்ஸில் போடப்பட்டிருந்த தொகையைக் கண்டு அதிகமாக இருக்கிறதே என்று இன்சூரன்ஸ் துறையில் இருக்கும் தனது நண்பரிடம் விபரம் கேட்டிருக்கிறார். 12 லட்சம் ரூபாய்க்கு கொடுக்கப் பட்ட அந்த பிரீமியம் அதே கவரேஜ் (பம்பர் டு பம்பர்) 53000 ரூபாய்க்குக் கிடைக்கும் என்று அவரது நண்பர் கூறியதைக் கேட்டு இவருக்கு அதிர்ச்சி.

ஆயிரம் இரண்டாயிரம் என்றால் பரவாயில்லை சொளையாக 20000 ரூபாய் என்றதும் கேள்வி கேட்க ஆரம்பித்திருக்கிறார். கார் புக் செய்த ஷோரூமின் சேல்ஸ் மேனேஜரிடம் ஏன் இன்சூரன்ஸில் இவ்வளவு வித்தியாசம் என்று கேட்டதற்கு எங்க இன்சூரன்ஸ்ல எல்லாம் கவர் ஆகிவிடும். மொத்ததுல ஆகாது என்று சின்னதா இருக்கச் சொல்ல உறிச்ச கோழி நீங்க சொல்றது. அதே கோழி பெரிசா இருக்கச் சொல்ல உறிச்சது நாங்க சொல்றது என்று அவர் பதில் அளிக்க, மீண்டும் தனது இன்சூரன்ஸ் நண்பரிடம் தொடர்பு கொண்டு மீண்டும் விளக்கம் கேட்க, அவரோ ரெண்டுமே ஒரே கோழிதானே என்ற விளக்கத்தை அளித்திருக்கிறார். சேல்ஸ் அதிகமாக்க டீலர்கள் செய்யும் டகால்டியே தவிர்த்து வேறு எதுவும் இல்லை. நீங்கள் நோண்டி நொங்கெடுப்பதாக இருந்தால் அவர்களிடம் இல்லாமல் வெளியே இன்சூரன்ஸ் வாங்கிக்கொடுக்க நான் உதவுகிறேன் என்று நண்பர் சொல்லி இருக்கிறார்.

அன்பருக்குக் குழப்பம் தீரவில்லை. மோட்டார் வாகனச் சட்டம் என்ன சொல்கிறது என்று தேடிப் படித்தார் சட்டத்தில் வாடிக்கையாளரை எங்களிடம் தான் இன்சூரன்ஸ் வாங்க வேண்டும் என்று யாரும் கட்டாயப்படுத்த முடியாது. அது வாடிக்கையாளரின் தனிப்பட்ட விருப்பம் சார்ந்தது என்று தெளிவாக்கப் பட்டிருந்தது.

சரி என்று சம்பந்தப்பட்ட கார் விற்பனையகத்தின் சிஆர்எம் தொடர்பு கொண்டு கேட்டதற்கு, நீங்கள் எங்களிடம்தான் கார் வாங்குகிறீர்கள் எனவே எங்களிடம்தான் இன்சூரன்ஸ் போட வேண்டும் என்று பதில் வந்திருக்கிறது. ஆனால், மோட்டார் வாகனச் சட்டத்தில் நீங்கள் இப்படி ஒரு வாடிக்கை யாளரைக் கட்டாயப்படுத்தக்கூடாது என்று சொல்லி இருக்கிறதே? அதன்படி நீங்கள் என்னைக் கட்டாயப் படுத்த முடியாதே என்று இவர் திருப்பிக்கேட்க, மறுமுனை சைலண்ஸ் ஆகி, இருங்கள் தகுந்த நபரைப் பேசச் சொல்கிறேன் என்று எஸ்கேப் ஆகியிருக் கிறார்கள்.

வழக்கம்போல கார்பரேட் விதிமுறைப்படி அன்பரின் புகார் கிடப்பில் போடப்பட, அன்பர் எல்லாவற்றையும் பதிவு செய்ய முடிவெடுத்து மெயில் அனுப்பத் துவங்கினார். அதற்குள்ளாக கார் டெலிவரி நேரமும் நெருங்க ஆரம்பித்தது. வண்டி எப்ப டெலிவரி எடுக்கப் போறிங்க என்று கேட்க ஆரம்பித் திருக்கிறார்கள். 20000 அதிகம் கட்ட மனதில்லாமல் அடுத்தகட்ட நடவடிக்கையை யோசித்திருக்கிறார் அன்பர்.

டெல்லியிலுள்ள கார் கம்பெனியின் கஸ்டமர் கேர் எண்ணிற்குத் தொடர்பு கொண்டு அதைப் பற்றிக் கேட்க அவர்களோ நாங்கள் நிச்சயம் கஸ்டமரை எங்களிடம்தான் இன்சூரன்ஸ் வாங்க வேண்டும்

# ஏமாறாதீர்!



என்று நிர்பந்திக்க மாட்டோம். இது தவறு என்று பதிலளித்திருக்கிறார்கள். கூடவே அன்பர் அளிக்கும் புகார் சரிதானா என்று விசாரிக்க அவரிடம் இன்சூரன்ஸ் எங்களிடம்தான் போட வேண்டும் என்று வலியுறுத்திய சேல்ஸ் மேனேஜரையும் கான்பிரன்ஸ் காலில் அழைக்கச் சொல்லிக் கேட்டி ருக்கிறார்.

நண்பர் உடனே சேல்ஸ் மேனேஜரை கான்பிரன்ஸ் கால் போட்டு சேல்ஸ்மேனேஜரிடம் பேசத் துவங்கி னார். டெல்லி அலுவலகம் சம்பாசனையைக் கேட்டுக் கொண்டிருக்கிறது என்று அவரிடம் சொல்லாமல் முதலிலிருந்து கதையை ஆரம்பிக்க, அவரோ கூலாக இதெல்லாம் இந்தக் கார் கம்பெனி பாலிசி. நீங்கள் எங்களிடம் இன்சூரன்ஸ் எடுத்தால்தான் க்ளெய்ம் கிடைக்கும். இல்லைன்னா உங்களுக்குத்தான் பிரச்னை என்று ஏகத்தக்கும் அடித்துவிட, மறுபக்கத்திலிருந்து எத்தினி நாளா கூழ் ஊத்தறே? அதென்ன கம்பெனி பாலிசி? அது எங்கே? நம் கம்பெனியின் எந்த டாக்கு மெண்டில் இருக்கிறது? என்று டெல்லி கம்பெனி கஸ்டமர் கேர் இடைமறித்துக் கேட்க, பிரச்னையின் தீவிரம் சேல்ஸ் மேனேஜருக்கு உரைத்திருக்கிறது. இந்த டிவிஸ்டை அவர் எதிர்பார்க்கவில்லை. வழக்கமான அப்பாவி ஆமாம்சாமி கஸ்டமர்களைப் போல நினைத்து அள்ளிவிட்டது தவறு என்று மாட்டிக் கொண்டார்.

அந்தர் பல்டி அடித்து, வாடிக்கையாளரே எங்கள் உயிர்மூச்சு அதை இன்சூரன்ஸ் மேல் விடமாட்டோம் என்று சமாளித்து வெளியே அன்பர் விருப்பப்பட்ட இடத்தில் இன்சூரன்ஸ் எடுத்துக் கொள்ள உதவு கிறோம் என்று பதிலளித்திருக்கிறார். இதன்படி இன் சூரன்ஸை வெளியே எடுத்து, ரூபாய் இருபதாயிரம் சேமித்திருக்கிறார் அன்பர்.

இதைப் பற்றி தனது உற்றார், உறவினர், நண்பர் களிடத்தில் பேசியபொழுது ஒருவருக்கும் இதுபோன்று இன்சூரன்ஸ் வெளியே நாமே எடுக்கலாம் என்பது தெரியவில்லை என்பது ஆச்சரியமாக இருந்திருக்கிறது. இந்த பிராடுதனத்தைப் பற்றி முழுவதுமாக ஆராய்ச்சி செய்யத் துவங்கினார்.

அனைத்து பிராண்ட் கார்களிலும், இன்சூரன்ஸ் என்பது கார் விற்பனை விலையுடன் வரும் பாக்கே ஜாகவே பலரும் நம்பிக் கொண்டு இருக்கின்றனர் என்பது அவருக்குத் தெரிந்து அதிர்ச்சியாகியிருக் கிறார்.

இந்தியாவில் 2017ஆம் ஆண்டு சுமார் 32 லட்சம் கார்கள் விற்பனையாகி இருக்கின்றன. சராசரியாக 10000 ரூபாய் அதிகம் வைத்த ஒவ்வொரு காருக்கும் இன்சூரன்ஸ் விற்கப்பட்டிருந்தாலும், மக்கள் தங்கள் அறியாமைக்குத் தந்த விலை சுமார் 320 கோடி ரூபாய்கள். அதாவது மாதம் 26 கோடி ரூபாய்கள், கார் விற்பனைக்கு மட்டுமே இந்தக் கணக்கு. லாரி, பஸ், விவசாய வாகனங்கள், டூவீலர்கள் போன்றவை களை யும் கணக்கெடுத்தால் மாதம் லவுட்டிய தொகை எவ்வளவு வருமென்பதை கூட்டிக் கழித்துப் பார்த்தால் குமாரசாமிகளுக்கே நெஞ்சு வலிக்கும்.

**இது ஒரு முகநூல் நண்பரின் பதிவு.**

## திருக்குறளை தடை செய்ய வேண்டும்!
### தினமணி நடுப்பக்க கட்டுரை.

ஒருமுறை ஒரு அறிஞர் திருக்குறளார் வீ.முனுசாமி அவர்களிடம் “திருக்குறள் படித்தால் பைத்தியம் பிடித்து விடுமாமே!” என்று சொன்னார். அதற்கு திருக்குறளார், “ஆமாங்க! ஐயா சொல்றதுல உண்மை இருக்கு!” என்றார். பிறகு அதை விளக்கமாகப் பேசினார்.

நாம் சாப்பிடும்போது கூட ஒரு ஒழுங்கு உண்டு. முதலில் கீரை, அடுத்து சாம்பார், பிறகு காரக்குழம்பு, அப்புறம் ரசம், மோர், ஊறுகாய் என்று சாப்பிடுவோம். ஏனெனில் நமது நாக்கின் சுவை அரும்புகள் அப்போதுதான் சுவையை உணர்ந்து ரசித்து சாப்பிட முடியும். ஆனால், ஒரு சிலர் எடுத்த வுடன் மோரும் கீரையும் சாப்பிட்டு விட்டு காரக் குழம்பையும் பாயாசத்தையும் கலந்து அடிச்சு சாப்பிட்டு விட்டு “சே என்னய்யா சாப்பாடு?” நல்லாவே இல்லையே என்று கூறி னால் நாம் புரிந்து கொள்ள முடியும், இந்த ஆளுக்கு முறை யாகச் சாப்பிடத் தெரியவில்லை என்று.

அப்படித்தான் தமிழில் இலக்கிய நூல்கள் படிப்பதற்கு ஒரு முறை உள்ளது. திருக்குறள் மிகவும் நுட்பமான நூல். அதைப் படிக்கும் போது முறையாகப் படிக்க வேண்டும். முறையாக ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அப்போதுதான் வள்ளுவர் நுட்பம் தெரியும் என்றார்.


தினமணி வைத்தியநாதனுக்கும் கட்டுரை எழுதிய கூமுட்டைக்கு இந்த நுட்பமான அறிவு இல்லை என்பது அம்பலமாகி விட்டது.

ஒரு விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். முதலில் வள்ளுவர் சிலையை கங்கைக் கரையில் வைக்கப் போகிறேன் என்று நாடகமாடிய ஆர்எஸ்எஸ் கயவாளிகள் இப்போது திருக்குறளை தடை செய்ய வேண்டும் என்று வந்து நிற்கிறார்கள். எச்சரிக்கை வேண்டும்.

**ஞான சூரியன் முனிசாமி.**


## விளம்பரக் கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| **முன்னட்டை உள்ளே (முழுப்பக்கம்)** | **ரூ.** | 10,000/- |
| **பின்னட்டை உள்ளே (முழுப்பக்கம்)** | **ரூ.** | 10,000/- |
| **பின்னட்டை (முழுப்பக்கம்)** | **ரூ.** | 15,000/- |
| **கருப்புவெள்ளை** | **ரூ.** | 5,000/- |



# சுயாட்சி, பிரிவினையாகுமா?

ம.பொ.சி.

மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்கிவிட்டால் பின்னர் பிரிவினைப் போக்கு வளர்ந்து விடக் கூடுமென்று கூறப்படுகிறது. இது, ஆதிக்கவாதிகள் காட்டும் பூச்சாண்டி உலக சமஷ்டி நாடுகளின் வரலாறு இதற்கு எதிராகவே இருக்கிறது.

**சோவியத் யூனியனிலே...**

“மத்தியில் சமஷ்டி, மாநிலங்களில் சுயாட்சி என்பது இந்தியாவில் மட்டுமே முதன் முதலாகப் பரீட்சிக்கப்பட விருக்கும் புதிய தத்துவமன்று. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, மலேசியா ஆகிய நாடுகளில் நடைமுறையிலிருந்து வரும் பழைய சித்தாந்தமாகும். மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்ட சமஷ்டி நாடுகளில் ஒன்றில்கூட பிரிவி னைப் போக்கு வலுத்து, நாட்டின் ஒருமைப்பாடு குலைந்து போனதாக வரலாறு கூறவில்லை. மாறாக, சுயாட்சி பெற்ற மாநிலங்கள் தேச ஒற்றுமையைக் காத்து வருவதையே காண்கிறோம்.

சோவியத் யூனியன் மொழிவாரிக் குடியரசு களைக் கொண்ட கூட்டுக் குடியரசு நாடாகும். அங்கு மாநிலங்கள் விரும்பினால் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து வாழவும் அரசியல் சட்டப்படி அவற்றுக்கு உரிமையளிக்கப்பட்டி ருக்கிறது. அப்படியிருந்ததும் சோவியத் யூனியன் அமைந்து அரை நூற்றாண்டுக்கு மேலாகியும் அங்கு பிரிவினைப் போக்கு தலைகாட்டவே இல்லை. மாறாக, 1917இல் வர்க்கப் புரட்சி வெற்றி பெற்று சோவியத் யூனியன் அமைந்த போது அந்த யூனியனுக்கு வெளியிலிருந்த அண்டை நாடுகள் சில, நாளடைவில் தாமே விரும்பி சோவியத் யூனியனிலே இணைந் துள்ளன. ஆம், உண்மையான சமஷ்டியில் மாநி லங்களின் உரிமை பறிக்கப் படமாட்டாவென் பதை, சோவியத் ஆட்சி தன்னைச் சுற்றியுள்ள நாடுகளுக்கு உணர்த்தியதன் விளைவாகவே அந்த நாடுகள் சோவியத் யூனியனில் விரும்பி இணைந்தன.

**அமெரிக்காவிலே...**

அமெரிக்கப் பெருநாடு பல்வேறு குடியரசு நாடுகளைக் கொண்ட சமஷ்டிக் கூட்டரசாகும். அமெரிக்க சமஷ்டி அமைந்து சுமார் 200 ஆண்டு களாகின்றன. இவ்வளவு நீண்ட காலத்திலே அந்த சமஷ்டியில் பிரிவினைப் போக்கு தலைகாட்டிய தில்லை. அமெரிக்க சமஷ்டி அரசியல் முதன் முதலாக வகுக்கப்பட்டபோது மாநிலங்கள் விரும்பினால் பிரிந்து வாழலாம் என்றும் அதிலே விதி இயற்றப்பட்டது. அப்படி இருந்தும், எந்த ஒரு மாநிலமும் அந்த விதியைப் பயன்படுத்தி அமெரிக் கக் குடியரசிலிருந்து பிரிந்து செல்லவில்லை. மாறாக, 12 மாநிலங்களைக் கொண்டு ஆரம்பமான அமெரிக்க சமஷ்டியானது, இன்று 52 மாநிலங்களைக் கொண்டதாக விரிவ டைந்துள்ளது. ஆம், ஆரம்பத்தில் அமெரிக்க சமஷ் டியில் சேர விரும்பாத பிரதேசங்கள் நாளடைவில் தாமாகவே வலுவில் வந்து சேர்ந்து கொண்டன. அத்துட னன்றி, விரும்பினால் பிரிந்து வாழ மாநிலங்களுக்கு உரிமையளிக்கும் விதியையும்

அரசியல் சட்டத்தி லிருந்து அகற்றிவிட மாநிலங்கள னைத்தும் ஒரு மனத்துடன் இசைந்தன.

மலேசியாத் தீவு ஒரு கோடி மக்களைக் கொண்ட சின்னஞ்சிறு நாடு. இந்தியா, பிரிட்டி ஷாருக்கு அடிமைப்பட்ட காலத்திலே மலேசியா வும் அடிமைப் பட்டது. இந்தியா விடுதலை பெற்ற தையடுத்து மலேசியாவும் விடுதலை பெற்றது. அப்படி விடுதலை பெற்ற ஆரம்ப கட்டத்திலேயே அதன் அங்கங்களான பினாங்கு போன்ற மாநிலங் களுக்கு முழு அளவு சுயாட்சி வழங்கப்பட்டது. மிச்ச அதிகாரங்கள் உட்பட மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளன. சுங்கம் கூட மாநிலங்களுக்கே உரிமையாக் கப்பட்டுள்ளது. பினாங்கு மாநிலத்திலிருந்து மலேசி யாவின் மற்ற பகுதிக்கு வருங்கால் சுங்கச் சோதனை யுண்டு.

மலேசியாவின் மக்கள் தொகையிலே, பூர்வ குடியி னரான மலாய்க்காரர்கள் 45 சதவிகிதம்தான். முன் எப்போதோ வந்தேறியவர்களான சீனர்கள் 40 சதவிகி தத்தினர். இந்தியர்கள் 10 சதவிகிதத்தினர். நிலைமை இப்படி இருந்தும், மலேசியாவின் மக்கள் தொகையில் சரி பாதியினராகக் கூட இல்லாத மலாய்க்காரர்கள் மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கத் தயங்கவில்லை.

உலக சமஷ்டி நாடுகளின் வரலாறு காட்டும் இந்த உண்மைகளுக்கு மாறாக, மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்கிவிட்டால் பிரிவினைப் போக்கு வலுத்துவிடு மென்று பூச்சாண்டி காட்டுகின்றனர் இங்குள்ள ஆதிக்கவாதிகள்!

அமெரிக்காவிலே மதவழிப்படி பார்த்தால், மக்களில் பெரும்பாலோர் கிறித்தவர்கள். உடையாலும் உணவாலும் இதர பழக்க வழக்கங்களாலும் ஒரே விதமான நாகரிகத்தைப் பின்பற்றுபவர்கள். ஆங்கில மொழியே அந்த நாட்டின் மொழியாக இருந்து வருகிறது. இப்படி மதம், மொழி, நாகரிகம் ஆகியவற் றில் ஒருமைப்பாடுடைய மக்களைக் கொண்ட அமெரிக்காவிலே மாநிலங்களுக்கு பூரண சுயாட்சி வழங்கப்பட்டிருக்கிறது. ஆம், 'யூனிடரி' ஆட்சி முறையில் அமெரிக்காவில் தேசிய ஒருமைப்பாடு காண்பது சாத்தியமில்லை என்பது ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. 'சமஷ்டி' முறைதான் சிறந்ததென்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.


இந்தியாவிலே, மொழி வேறுபாடுகளும் மத வேறுபாடுகளும் நாகரிக வேறுபாடுகளும் நிறைய இருக்கின்றன. இந்த நாட்டிலே 'யூனிடரி' முறையில் ஒருமைப்பாடு காண்பதென்பது இயலாத காரியம். "இயன்றிருக்கிறதே' என்று கூறலாம். இன்றுள்ள அரசியல் அமைப்பு நிலையானதன்று. இது நீடித்தால், தேசிய ஒருமைப்பாடு என்றேனும் ஒருநாள் குலைவது உறுதி. இன்றுள்ள ஒருமைப்பாடுடைய இந்தியா வானது, அடித்தளமில்லாமல் எழுப்பப் பெற்ற கட்டி டம் போன்றது. அதனாற்றான், 'மத்தியில் சமஷ்டி, மாநிலங்களில் சுயாட்சி' என்ற சித்தாந்தப்படி நடை முறையிலுள்ள அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டு மென்கிறது தமிழரசுக் கழகம்.


இந்திய உபகண்டத்திலே, மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்க மனமொப்பாததால்தான் பாகிஸ்தான் பிரிவினை எற்பட்டது. பாகிஸ்தானிலும் மாநில சுயாட்சி மறுக்கப்பட்டதால்தான் கிழக்கு வங்கம் தனியாகப் பிரிந்து 'வங்க தேசம்' ஆகிவிட்டது!

இனியும் தொடர்ந்து மாநில சுயாட்சி மறுக்கப் படுவது புத்திசாலித்தனம் தானா?

சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்கள் எழுதிய, மாநில சுயாட்சிக் கிளர்ச்சியின் வரலாறு என்ற புத்தகத்திலிருந்து... ●


**தற்போது விற்பனையில்**




பெ. மணியரசன் எழுதிய
**பா.ச.க. பாசிச எதிர்ப்பின் பாதை**
பக்கம் : 48 / விலை : ரூ. 35/-

கி.வெங்கட்ராமன் எழுதிய
**கொரோனாவுக்கு பின் மாற்று பாதை**
பக்கம் : 56 / விலை ரூ. 45/-

நூல் கிடைக்குமிடம்

பன்மை வெளி

21, முதல் தெரு, முதல் பிரிவு,
கலைஞர் கருணாநிதி நகர், சென்னை - 600 078
**பேச :** 044 - 2474 2911, 94439 18095, 98408 48594
**இணையம்** : www.panmaiveli.com |
**மின்னஞ்சல்** : panmaiveli@gmail.com

# திட்டமிட்டு மத சுதந்திரத்தை மீறுகிறதா?



பன்னாட்டு அளவில் மத சுதந்திரத்தின் செயல் பாடுகள் குறித்து அறிய கடந்த 1998ஆம் ஆண்டு அமெரிக்க அரசு பன்னாட்டு மத சுதந்திரத்துக்கான ஐக்கிய அமெரிக்க ஆணையம் என்ற ஆணையத்தை நிறுவியது. இந்த ஆணையம் ஒவ்வொரு ஆண்டும் உலகில் எந்தெந்த நாடுகளில் மத சுதந்திரங்கள் மீறப் படுகின்றன என்பது குறித்த தனது பரிந்துரையை அறிக்கையாக வெளியிடும்.

திட்டமிட்டு மதசுதந்திர மீறல்களில் ஈடுபடும் நாடுகளை குறிப்பிட்ட அக்கறை கொண்ட நாடுகள் என்றும் மத சுதந்திர மீறல்களை பொறுத்துக் கொள் ளும் நாடுகளை கண்காணிக்கப்பட வேண்டிய நாடுகள் என்றும் இந்த ஆணையம் பரிந்துரை செய்யும்.

இதன் அடிப்படையில் அமெரிக்க வெளியுறவுத் துறை மத சுதந்திரங்களை மீறும் நாடுகளின் பட்டியலை, ஆண்டுதோறும் வெளியிடும். அந்த வகையில் கடந்த ஏப்ரல் மாதம் சர்வதேச மத சுதந்திரத் துக்கான ஐக்கிய அமெரிக்க ஆணையம் மத சுதந்திரங் களை மீறும் நாடுகள் குறித்த தனது பரிந்துரையை வெளியிட்டது.

இந்த நிலையில் மத சுதந்திரங்களை மீறும் நாடுகளின் பட்டியலை அமெரிக்க வெளியுறவுத்துறை இம்மாதம் வெளியிட்டது. இதுகுறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோ வெளியிட் டுள்ள அறிக்கை யாதெனில், பாகிஸ்தான், சீனா உட் பட எட்டு நாடுகள் குறிப்பிட்ட அக்கறை கொண்ட நாடுகளாக, அதாவது திட்டமிட்டு மத சுதந்திர மீறல் களில் ஈடுபடும் நாடுகளாக அறிவிக்கப் பட்டுள்ளன.

மியான்மர், எரிட்ரியா, நைஜீரியா, வடகொரியா, சவுதி அரேபியா, துர்க்மெனிஸ்தான் ஆகிய நாடு களுடன் பாகிஸ்தான், சீனாவும் மிக மோசமான மத சுதந்திர மீறல்களில் ஈடுபடும் நாடுகளின் பட்டியலில் இடம் பிடித்துள்ளன.

அதேபோல், ரசியா, கியூபா, நிகரகுவா, கொமொ ரோஸ் ஆகிய நாடுகள் கண்காணிக்கப்பட வேண்டிய நாடுகளாக பட்டியலிடப்பட்டுள்ளன. மத சுதந்திரம் என்பது அன்னியப்படுத்த முடியாத உரிமை. சுதந்திர மாக கட்டமைக்கப்பட்ட சமூகங்கள் செழித்து வளர் வதற்கான அடித்தளம் அது.

அமெரிக்கா மத துன்புறுத்தல்களில் இருந்து தப்பி வந்தவர்களால் நிறுவப்பட்ட ஒரு நாடாக உள்ளது. மத சுதந்திரத்தைப் பெற விரும்புவோரைப் பாதுகாக்க இன்றியமையாத நடவடிக்கையை அமெரிக்கா இப்போது மீண்டும் எடுத்துள்ளது என்பதாகும்.

அமெரிக்க வெளியுறவுத்துறையின் இந்த நடவடிக் கையை சர்வதேச மத சுதந்திரத்துக்கான ஐக்கிய அமெரிக்க ஆணையம் வரவேற்றுள்ளது. அதே சமயம் திட்டமிட்டு மத சுதந்திர மீறல்களில் ஈடுபடும் நாடுகளாக இந்தியா, ரசியா, சிரியா, வியட்நாம் ஆகிய நாடுகளை இந்த ஆணையம் பரிந்துரை செய்திருந் ததும், ஆனால் அமெரிக்க வெளியுறவுத் துறை அதனை ஏற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



# குறட்டை

குறட்டை, தூக்கக்கோளாறு சம்பந்தப்பட்ட பிரச்சனையாகும். இது தூக்க சுழற்சியையும் தொந்தரவு செய்யக்கூடியது. தூங்கும்போது, கழுத்துத் தசைகள் இலகுவாகும் அப்போது மூக்கு, தொண்டை பாதை குறுகியதாக மாறும். அதனால் காற்று நுரையீரலுக்குள் செல்வது சிரமமாகும். மேலும் திசுக்கள் அதிர்வுக்குள்ளாகும். குறட்டை விடும்போதுதான் இந்தப் பிரச்சினைகள் உண்டாகும். குறட்டைப் பிரச்சனை யைக் கட்டுப்படுத்த சில வீட்டு வைத்தியங்கள் கைகொடுக்கும்.

***சோயா :*** குறட்டைப் பிரச்சினை இருப்பவர்கள், பால் பொருட்களை உட்கொள்வது நல்லதல்ல. பசுவின் பால், பாலாடைக்கட்டி போன்றவை கபத்தை அதிகரிக்கும். இதனால் இரவில் குறட்டைப் பிரச்சினையும் அதிகமாகும். பால் பொருட்களுக்கு மாற்றாக சோயாபால் உள்ளிட்ட பிற சோயா பொருட்களை உட்கொள்ளலாம். அவை உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குவதோடு குறட்டையையும் குறைக்கும்.

***தண்ணீர்:*** தினமும் போதுமான அளவு தண்ணீர் பருகுவது சளியைப் போக்கும். மார்புக்கும் இதமளிக்கும், சளி உருவாகுவதைத் தடுக்க உடலில் எப்போது நீர்ச்சத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். குறைந்த பட்சம் 3 லிட்டர் தண்ணீர் பருக வேண்டும். பருகினால் மார்புக்கு இதமளித்து குறட்டைப் பிரச்சினையில் இருந்து பிடுபடவும் உதவும்.

***தூக்கம் :*** போதுமான நேரம் தூங்குவதும் குறட்டையைத் தவிர்க்க உதவும். உடலும், உள்ளமும் உற்சாகமாக இல்லாவிட்டால் தொண்டை, நாக்கு, தசைகள் இறுக்கமடைந்துவிடக் கூடும். அதனாலும் குறட்டை உருவாகிவிடும். தினமும் ஏழு மணிநேரத் தூக்கம் அவசியம். தூங்குவதில் சிக்கல் இருந்தால் குறட்டைப் பிரச்சினையும் தலைதூக்கிவிடும்.

***பாதாம்:*** மெலடோனின் நிறைந்த உணவுகள் குறட்டையைக் குறைக்க உதவும் என்று கண்டறியப்பட்டுள்ளது. மெலடோனின் என்பது அடிப்படையில் ஒரு ஹார்மோனாகும். பாதாம், கிவி, செர்ரி மற்றும் அன்னாசி போன்ற பழங்களில் இந்த ஹார்மோன் நிறைந்திருக்கிறது. அவற்றை உணவில் சேர்த்துக் கொள்வது குறட்டையில் இருந்து விடுபட உதவும்.

***பூண்டு:*** சூடான உணவுகள் குறட்டையைக் குறைக்க உதவும். பூண்டுவை வறுத்து சூடாக சாப்பிடுவது சளியைப் போக்கவும், அது உருவாகுவதைத் தடுக்கவும் உதவும். பூண்டில் பாக்டீரியா எதிர்ப்பு பண்புகளும் உள்ளன. பூண்டின் ருசி நாக்குக்கும் விருந்து படைக்கும் அதன் வாசனையும் நிறைய பேருக்குப் பிடிக்கும்.

***சாமந்தி டீ :*** சாமந்தி டீயில் ஆல்பா பிசபோலோல் மற்றும் டைமசோலின் ஆகிய அழற்சி எதிர்ப்புச் சேர்மங்கள் உள்ளன. இவை குறட்டையைக் குறைக்க உதவும். காலையிலோ அல்லது மாலையிலோ சூடாக சாமந்தி டீ பருகலாம்.

***மிளகுக்கீரை எண்ணெய்:*** இந்த எண்ணெய்யில் அழற்சி எதிர்ப்புப் பண்புகள் உள்ளன. அவை நாசியின் உள் புறத்தில் உள்ள அழற்சியைக் குறைக்க உதவும். நாசி அடைப்பைத் திறந்து குறட்டையை நிறுத்த உதவும்.

***இஞ்சி :*** இஞ்சி மற்றும் தேன் கலந்து டீ, பல நோய்களைக் கட்டுப்படுத்தக்கூடியது. காலையிலும், இரவிலும் இந்த டீயை பருகுவது குறட்டைப் பிரச்சினை குறைவதற்கு உதவும். இரவில் நல்ல தூக்கமும் வரும். இஞ்சியில் அழற்சி எதிர்ப்பு மற்றும் பாக்டீரியா எதிர்ப்புப் பண்புகள் உள்ளன. அவை தொண்டைக்கு இதமளிக்கும் குறட்டையையும் போக்கும்.

***நெய் :*** ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கு நன்மை செய்யும் நெய், குறட்டையைக் கட்டுப்படுத்தவும் உதவும். அதனை உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

மேலும் சில பழக்கவழக்கங்களை பின்பற்றுவது குறட்டையில் இருந்து விடுபட வழிவகுக்கும்.

உடல் பருமன் கொண்டிருந்தால் அதனைக் குறைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். புகைப்பழக்கம் கொண்டவர்களாக இருந்தால் அதனையும் கைவிட வேண்டும். தினமும் தவறாமல் உடற்பயிற்சி செய்ய வேண்டும். நாக்கு, தொண்டைகளுக்குரிய பயிற்சிகளை மேற்கொள்வதும் பலன் தரும். இரவில் தூங்குவதற்கு முன்பு முகத்தில் நீராவி பிடிப்பதும் நல்லது. பயன்படுத்தும் தலையணையை அடிக்கடி மாற்றுவதும் அவசியம்.

•



# மகா க(காவி)வி பாரதியார்? பார்ப்பன வெறி பிடித்த பாரதி

***அகண்ட பாரதம் ஆரிய நாடு!***
***நால்வர்ணம் நாட்டுநலன்!***
***பசுவதை தெய்வக்குற்றம்!***
***இந்தி பொதுமொழி!***
***சமஸ்கிருதம் தெய்வபாஷை!***
***மதமாற்றம் தடைசெய்!***

ஆர்எஸ்எஸ் எனும் பச்சைப் பார்ப்பன இயக்கம் தோன்றும் முன்னரே இம் முழக்கங்களுக்கு சொந்தக் காரன்! ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் முன்னோடி! தன் கவிதைகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் சிலதை கிறுக்கி தன்னை முற்போக்காளனாய் காட்டிக் கொள்ளும் வித்தையில் கைதேர்ந்தவன் ஆரிய சனாதன வெறிபிடித்த பாரதி! அதனால்தான்

**வேதம் அறிந்தவன் பார்ப்பான் பல**
**வித்தைகள் தெரிந்தவன் பார்ப்பான்**
**என்றான் போலும்.**
***அகண்ட பாரதம் ஆரியநாடு!***
**உன்னத ஆரிய நாடெங்கள் நாடே என்றும்**
**வானாறு பேரிமய வெற்பு முதல்**
**பெண்குமரி யீராகும் ஆரியநா டென்றே யறி!**
என்றும்

இந்திய நாட்டை மூன்று விழுக்காடு பார்ப்பனர் களின் நாடாகப் பாடி மகிழ்ந்தான்.

**ஆரியர் வாழ்ந்து வரும் அற்புத நாடென்பது போய்ப்**
**பூரியர்கள் வாழும் புலைத்தேச மாயினதே**
**வீரியம் அழிந்து மேன்மையும் ஒழிந்து நம்**
**ஆரியர் புலையர்க் கடிமைகள் ஆயினர்.**
என்று புலம்பினான்.

***நால்வர்ணம் நாட்டுநலன்!***

பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் முதலிய நால்வருணங்கள் இருக்க வேண்டும். நால்வருணம் அழிந்தால் மனித இனமே அழிந்து விடும் என்ற வர்ணாஸ்ரம வெறிபிடித்த பாரதி

**நாலு குலங்கள் அமைத்தான் அதை**
**நாசன் உறப்புரிந்தனர் மூடமனிதன்**
என்றான்.

**நான்கினில் ஒன்று குறைந்தால்**
**வேலை தவறிச் சிதைந்தே செத்து**
**வீழ்ந்திடும் மானிடச் சாதி**
என்று ஒப்பாரி வைத்தான்.

சர்.பி.டி.தியாகராயர், டி.எம்.நாயர், சி.நடேசனார் ஆகியோர் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரில் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை தோற்றுவித்தபோது, அதற்கு எதிரிவினையாற்றியவன் பாரதி!

“பொய்யும் புனைவுமாகத் திராவிடர்களென்றும் ஆரியர்கள் என்றும் பழைய சொற்களுக்குப் புதிய அபாணடமான அர்த்தங்கள் கற்பித்துக் கொண்டு வீண் சண்டைகள் வளர்ப்பதில் ஹிந்து சமூகத்துக்கே கெடுதி விளையக்கூடும். இந்தப் பிராமணரல்லாதார் கிளர்ச்சி கால கதியில் தானே மங்கி அழிந்து விடுமென்று நிச்சயிப்பதற்கும் போதிய காரணங்களிருக்கின்றன என்றான்.

***பசுவதை தெய்வக்குற்றம்!***

பசுவை இந்துக்களாகிய நாங்கள் தெய்வமாக வணங்குவதால் நாங்கள் பெரும்பகுதியாக வாழ்வதும், எங்களடைய பூர்வீக சொத்தாகிய இந்தத் தேசத்தில் பகிரங்கமாகப் பசுவின் கொலையை யாரும் செய்யாமல் இருப்பதே மரியாதையாகும் என்று 1917 லேயே சுதேசமித்திரன் ஏட்டில் பசுவதை தடை கோரியவன் பாரதி!

***இந்தி பொதுமொழி!***

இந்தியாவின் தேசிய மொழியாக இந்தி இருக்க வேண்டும் என்று 1906ல் இந்தியா வார ஏட்டில் இந்தி பாஷை பக்கம் என்ற தலைப்பில் கட்டுரை எழுதினான்.

தமிழர்களாகிய நாம் ஹிந்தி பாஷையிலே பயிற்சி பெறுதல் மிகவும் அவசியமாகும். ஹிந்திப் பாஷையை எதிர்க்க என்ன அவசியம் இருக்கிறது என்று கேட்கிறோம். இந்தியா பலவித பிரிவுகளுடையதாய் இருந்த போதிலும் உண்மையிலே ஒன்றாய் இருப்பதற்கிணங்க, அதிலுள்ள வெவ்வேறு நாடுகளிலே வெவ்வேறு பாஷைகளிருந்த போதிலும் முழுமைக்கும் ஒரு பொது பாஷை வேண்டும். தமிழர்கள் தமிழும் ஹிந்தியும் தெலுங்கர் தெலுங்கும் இந்தியும் பெங்காளத்தார் பெங்காளியும் இந்தியும் என இவ்வாறே எல்லா வகுப்பினரும் அறிந்திருப்பார் களானால் நமக்குப் பொதுப்பாஷை ஒன்றிருக்கும். (பாரதி தரிசனம்)

**சமஸ்கிருதம் தெய்வ பாஷை!**

செத்தமொழி சமஸ்கிருதத்தை தெய்வபாஷை என்று உயர்த்திப் பிடித்தவன் பாரதி!

நம் முன்னோர்களைப் பின்பற்றி புண்ணிய பாஷையாகக் கொண்டாடி வரும் சமஸ்கிருத பாஷை மிகவும் அற்புதமானது. அதைத் தெய்வ பாசையென்று சொல்வது விளையாட்டன்று. மற்ற சாதாரண பாசைகளையெல்லாம் மனித பாசையென்று சொல்லுவோமானால், இவை அனைத்திலும் சிறப்புடைய பாசைக்குத் தனிப்பெயர் ஒன்று வேண்டுமல்லவா. அதன் பொருட்டே அதைத் தெய்வ பாசை என்கிறோம். (பாரதியார் கட்டுரைகள்)

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்.

என்கிற பாடலைக்கூட பாரதி 1915 ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற தமிழ்ச் சங்கத்தின் பரிசுப் போட்டிக்காக நண்பர்களின் வற்புறுத்தலினால் எழுதியதாக கூறப்படுகிறது. எனவே இப்பாடல் பாரதி தமிழ்மேல் இருந்த காதலால் எழுதியது அல்ல என்பது புலனாகிறது.

**மதமாற்றம் கூடாது!**

பஞ்சத்தில் பசியால் வாடிய மக்களுக்கு பல்வேறு உதவிகளைச் செய்துவந்த கிறித்தவப் பாதிரியார்கள் மீது சீறிப் பாய்ந்தான் பாரதி.

எங்கிருேந்தோ வந்த ஆங்கிலேயப் பாதிரிகள் பஞ்சம் பற்றிய ஜனங்களுக்குப் பலவித உதவிகள் செய்து நூற்றுக்கணக்கான மனிதர்களையும், முக்கியமாக திக்கற்ற குழந்தைகளையும் கிறிஸ்தவ மதத்திலே சேர்த்துக் கொள்கிறார்கள்.

ஹிந்து ஜனங்களின் தொகை வருசந்தோறும் அதிகபயங்கரமாகக் குறைந்து கொணடு வருகிறது. ஹிந்து ஜனங்கள் நமது ரத்தம், நமது சதை, நமது எலும்பு, நமது உயிர், கோமாமிசம் உண்ணாதபடி அவர்களை சுத்தப்படுத்தி, அவர்களை மீண்டும் நமது இந்து சமூகத்திலே சேர்க்க வேண்டும். (பாரதியார் கட்டுரைகள்)

1921இல் லோக குரு பாரதமாதா என்ற தலைப்பில் இந்தியாவிற்குச் சுதந்திரம் கேட்பதே இந்து தர்மத்தைக் காப்பாற்றத்தான் என்று எழுதியுள்ளான். (பாரதியார் கட்டுரைகள்)

**பாரதியும் மீசையும்!**

பார்ப்பன் தர்மத்திற்கு எதிராக மீசை வளர்த்தான் பாரதி என்று சிலாகிப்பர் சிலர். பாரதியின் மீசை பார்ப்பன தர்மத்திற்கு எதிரானதா? தான் மீசை வளர்த்த கதையை அவரே சொல்கிறார்.

வேத பூமியாகிய ஆரிய வர்த்தத்தில் பிராமணர் களில் மீசை இல்லாமலிருப்பது சாஸ்திர விரோத மென்று பாவிக்கிறார்கள். அங்கு ஒருவன் மீசையைச் சிரைத்தால் அவனுடைய நெருங்கிய சுற்றத்தாரில் யாரேனும் இறந்து போனதற்கடையாளமாகக் கருதப் படுகிறது. பல வருசங்களுக்கு முன்பு நான் ஸ்ரீகாசியில் ஜயநாராயண கலாசாலை என்ற இங்கிலீஷ் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து வாசிக்கப் போனேன். நான் தமிழ் நாட்டிலிருந்து சென்றவனாதலால் தமிர்நாட்டுப் பிரா மணரின் வழக்கப்படி அடிக்கடி முகச்சவரம் செய்து கொண்டிருந்தேன். அப்போது என்னுடன் படித்துக் கொண்டிருந்த பிள்ளைகள் என்னை நோக்கி மிகவும் ஆச்சர்யப்பட்டனர்.

எப்போது பார்த்தாலும் இவன் மீசையை சிரைத்து விட்டு வருவதன் காரணம் யாதென்று அவர்களுக்குள் ளேயே பல நாள் ஆலோசனை செய்து பார்த் தார்கள். அவர்களுக்கொன்றும் புலப்படவில்லை. கடைசியாக என்னையே ஒருவன் கேட்டுத்தீர்த்தான். உங்கள் குடும்பத்தில் யாரேனும் வாரம் தவறாமல் செத்துப் போய்க் கொண்டிருக்கிறீர்களா? என்று என்னிடம் வினவினான். அவன் இங்ஙனம் கேட்டதன் சாரத்தை அறிந்து கொண்டு, அப்படியில்லையப்பா! தமிழ்நாட் டில் பிராமணர் மீசை வைத்துக் கொள்ளும் வழக்க மில்லை என்று தெரிவித்தேன் என்கிறார். (பாரதியார் கட்டுரைகள்)

எனவே வடநாட்டு ஆரியர்களின் கலாச்சார முறையைப் பின்பற்றியே பாரதி மீசையை வைத்துக் கொண்டான் என்பது தெரிகிறது.

ஆங்கிலேயரிடம் மன்னிப்பு கோருவதும் வெள்ளை யன் கையில் அகப்படாமல் ஓடிஒளிந்து, தலைமறைவு வாழ்க்கை வாழ்வதுமாக இருந்த பாரதியின் மீசையை வீரத்தின் அடையாளமாக பலர் புகழ்வதைக் கண்டு எப்படி சிரிப்பது எனத் தெரியவில்லை.

அச்சமில்லை அச்சமில்லை என்று அவன் பாடி யதை நினைக்கையில் கோழைகள் இருள் சூழ்ந்த பகுதி களைக் கடக்கும்போது பயம் தொற்றிக் கொள்ளாமல் இருக்க உரத்த குரலில் பாடிக் கொண்டோ, பேசிக் கொண்டே நடக்கும் பழக்கம் இன்றும் கிராமப்

பகுதிகளில் உண்டு. அதுதான் நினைவிற்கு வருகிறது. பாரதியின் 'அச்சமில்லை அச்சமில்லை' பாடலும் அந்த வகையில் எழுந்ததுதானோ?

### பாரதி ஆராய்ச்சி!

திராவிட இயக்கத் தோழர்களே கூட பாரதியின் ஒருசில பாடல் வரிகளை பார்த்துவிட்டு தவறான மதிப்பீட்டுக்கு வந்து விடுகிறார்கள். 1937லேயே 'பாரதி ஆராய்ச்சி' என்ற தலைப்பில் குடியரசு ஏட்டில் வெளி வந்த கட்டுரை இதற்கு தக்க பதிலாக அமையும்!

பாரதியை ஒரு தெய்வமாக பாவித்து, அவருடைய படத்துக்கு மாலைபோட்டு, தீப நெய்வேத்தியங்ககூட சிலர் செய்கிறார்கள். இப்படியெல்லாம் செய்வதற்குக் காரணம் பார்ப்பனர்களின் சூழ்ச்சிப் பிரச்சாரமும் பொதுமக்களின் குருட்டுத்தனமான முட்டாள் நம்பிக்கையுமே ஆகும்.

இந்தக் கொண்டாட்டங்களுக்கு முக்கியக் காரணம் அவர் ஒரு பார்ப்பனர் என்பதேயாகும். ஒரு பார்ப்பான் எவ்வளவு அயோக்கியனாயிருந்தாலும் ஒழுக்கங் கெட்டவனாயிருந்தாலும் துர்ப் பழக்க முடையவனாயிருந்தாலும், பேடியாயிருந்தாலும் பித்துக்குளியாய் இருந்தாலும் அவனைப் பற்றி அவனுடைய குற்றங்களையெல்லாம் மறைத்து 'இந்திரன்' என்றும் 'சந்திரன்' என்றும் உயர்த்திப் பேசி, எழுதி அதன் மூலம் தங்கள் இனப்பிழைப்புக்கு வழிதேடிக் கொள்கிறார்கள். இந்த அடாத காரியத் துக்குக் தகுந்த வசதிகள் அவர்களுக்குத் தாராளமாய் இருக்கின்றன.

மனு ஆட்சி எப்படியாவது ஏற்பட வேண்டும் என்று பார்ப்பனர்கள் இரவும் பகலும் கனவு கொண் டிருக்கும் பொழுது, அதற்கு உதவியாக எழுதப்பட் டிருக்கும் பாடல்களை பார்ப்பனர்கள் கை நழுவ விடுவார்களா? பாரதி அநேக பாடல்களை குடிவெறி யில் பாடியிருக்கிறார். அவர் நிதான புத்தியோடு பாட வில்லை என்று சுலபத்தில் அறிந்து கொள்ளலாம்.

பார்ப்பனரைப் பற்றி பாரதியின் உண்மையான அபிப்பிராயம் என்னவென்றால் பார்ப்பனரே உயர்ந்த வகுப்பினரென்றும் இந்தியா அவர்களுக்கு சொந்த சொத்து என்றும் அவர்களுடைய ஆரிய பாஷையே உயர்ந்ததென்றும் கருதியே வந்திருக்கிறார் என்பது தான்! பார்ப்பனரின் நிலைமை உயர வேண்டு மென்பதே அவருடைய நோக்கமெனறும் தெரிகிறது. இதற்கு மாறாக அவரைப் பற்றி நினைத்துக் கொள்ள 'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே' தமிழ் மொழி போல் எங்கும் காணோம்' என்ற வரிகள் எடுத்துக்காட்டப்படுமானால் அப்படி இரண் டொன்று பாடியிருப்பதும் கூடக் குடிவெறி என்று தான் சொல்ல வேண்டும்.

**குடியரசு 17.10.1937.**

## களவாடிய காதல்!

என்ன சொல்கிறாய்
என் அன்புத் தோழியே
ஊரடங்கில் ஊர் சென்று
பெரியம்மா வீட்டில்
இருந்தாயா?
இந்த ஏழெட்டு மாதமாய்
என்னை தினம் வந்து
சந்தித்தது நீயில்லையா
அது உன் தங்கையா?

நான் உனை தொட்டு
விளையாடிய நேரம்
தடை சொல்லாது
புன்னகைத்து
அனுபவித்து
பின்னர்
இடைவெளி வேண்டும் – சமூக
இடைவெளி வேண்டும் – என
விண்ணப்பம் கோரியது
நீயில்லையா
அது உன் தங்கையா?

பேசக் கூடாத
அந்தரங்க விசயத்தை
பேசிய போதும்
கேள்வியை
கேட்ட போதும்
ரசித்து நாணம்
கொண்டு நின்றது
நீயில்லையா
அது உன் தங்கையா?

இத்தனை மாதமும்
நான் கேட்கும்
போதெல்லாம்
பண உதவி செய்து
என்னைக் காத்து
இரட்சித்தது
நீயில்லையா
அது உன் தங்கையா?

அய்யோ...
கெட்டதே எண்ணாத
என் ஆசை கெட்டதே!
அரசுக்கு ஆதரவாய்
முகக் கவசம்
அணிந்ததாலும்
சமூக இடைவெளியை
பின்பற்றியதாலும்
அடையாளம்
தெரியாமல்
ஆள் மாறிப்போனதே!

கொரோனா தொற்று
புரட்டிப் போட்டது
மனித உயிர்களை
மட்டுமல்ல
மாசற்ற நம்
காதலையும்தான்!

அன்பே!
இந்த நிலையில்
நான் யாருக்கோ
ஒருவருக்கு
துரோகியாகிறேன்
அது யாரென்று
நீயும் தங்கையும் கூடி
முடிவெடுங்கள்
துரோகத்திலும் – ஒரு
நியாயமிருக்கட்டும்.

**–பூவைதயா.**

நான்கு மணிநேரத்திற்கு ஒருமுறை கட்டாயம் சிறுநீர் கழிக்க வேண்டும்.

காலையிலும் இரவு உணவு உட்கொள்ளும் முன்பும் மலம் கழிக்க வேண்டும். கண்ட நேரங்களில் மலம் கழிப்பது மலச்சிக்கலுக்கு வழி வகுக்கும்.

காலை, மாலை இருவேளைகளிலும் குளிக்க வேண்டும். மழைக்காலங்களில் காலையில் மட்டும் குளித்தால் போதுமானது.

உள்ளாடைகள் கிழியாவிட்டாலும் ஆறு மாதத்திற்கு ஒருமுறை உள்ளாடைகளை மாற்ற வேண்டும். ஒருநாள் பயன்படுத்தியபின் கட்டாயம் துவைத்து காயப்போட வேண்டும்.

சிறுவர்கள் ஒரு தேக்கரண்டி, பெரியவர் இரண்டு தேக்கரண்டி, ஊறவைத்த வெந்தயத்தை, வெறும் வயிற்றில் மென்று விழுங்க வேண்டும். சர்க்கரை நோய், இரத்தக் கொதிப்பு வராமல் அது தடுக்கும். ஏற்கனவே இந்நோய்கள் இருந்தால், வெந்தயம் கட்டுக்குள் வைத்துக் கொள்ளும்.

காலை உணவுக்கு அரை மணி நேரத்திற்கு முன், தோல் நீக்கிய இஞ்சித் துண்டைச் சாப்பிடுங்கள். கொழுப்பைக் கறைக்கும், தொப்பையைக் கரைக்கும்.

உணவை நன்றாக மென்று, பொறுமையாக உண்ணுங்கள்.

ஒரு முறை பயன்படுத்தப்பட்ட எண்ணெயை மீண்டும் பயன்படுத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை உண்ணக்கூடாது.

மைதாவில் செய்யப்பட்ட பரோட்டாவை உண்ணக்கூடாது. அது வாழ்நாளைக் குறைக்கும். குளிர்பானம், அடைக்கப்பட்ட தின்பண்டங்கள் வேண்டவே வேண்டாம்.

பிராய்லர் கோழிக்கறி உண்ணக்கூடாது. மீன், ஆட்டுக்கறி, நாட்டுக்கோழிக்கறி உண்ணலாம்.

மதுவும் புகையும் வேண்டவே வேண்டாம்.

மதியம் உணவுக்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு சுக்குக்காபி குடிப்பது மிகவும் நல்லது.



உண்ட உணவு முழுமையாகச் செரிப்பதற்கு முன்பு அடுத்த திட உணவை உட்டகொள்ளக் கூடாது.

பாதாம், முந்திரி, உலர்பழங்கள், பழங்கள், கீரைகள், டார்க் சாக்லெட், கிரீன் டீ, கடலை மிட்டாய், எள் ஊருண்டை, பனைவெல்லம், சோற்றுக் கற்றாழை (ஏழு முறை சுத்தம் செய்து தேன் கலந்து) நாள் தோறும் சாப்பிடலாம்.

பயோட்டின் (எச் வைட்டமின்) என்ற வைட்டமின் குறைவால், தலைமுடி உதிர்தல், நகங்கள் உடைதல், தோல் நோய், எடை ஊறைவு, தசைவலி, கொழுப்பு அடைப்பு, மன அழுத்தம் ஏற்படும். இவற்றைத் தவிர்க்க, வேர்க்கடலை, முந்திரி, மீன், முட்டை, வாழைப்பழம், பப்பாளி, தக்காளி, காலிபிளவர், காளான், மோர் சாப்பிட வேண்டும்.

காலை அல்லது மாலை ஒரு மணி நேரம் உடற்பயிற்சி செய்தல் நல்லது.

வேர்க்கடலை, பேரீச்சம்பழத்தை நாள்தோறும் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும். கீரையை வாரத்திற்கு மூன்று நாட்கள் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கேழ்வரகை சேமியாவாகவும், கொழுக்கட்டையா கவும் ரொட்டியாகவும் வாரத்திற்கு இருமுறை குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும்.

ஆப்பிள், ஆரஞ்சை விட பப்பாளி, கொய்யாவில் சத்துகள் அதிகம். நாள்தோறும் இவற்றை குழந்தை களுக்கு உண்ணக் கொடுக்க வேண்டும்.

பெண்கள் மரச்செக்கு எண்ணெயைப் பயன்படுத் தினால் நல்லது. நாள்தோறும் குறைந்தது ஐந்து பேரீச்சம் பழங்கள் உட்கொள்ள வேண்டும். கருப்பு அரிசி, கருப்பு எள், கருப்பட்டி, கருப்பு உளுந்து பண்டங்களை உட்கொள்ள வேண்டும். மண்பானைத் தண்ணீரைக் குடிப்பது நல்லது.

பிரிட்ஜில் வைக்கப்பட்ட குழம்பு, மாவு வகை களைப் பயன்படுத்தாதுர்கள். சீரகத்தண்ணீர், சோம்புத் தண்ணீர் குடிக்கலாம்.

இரவு பத்து மணிமுதல் காலை ஐந்து மணிவரை கட்டாயம் உறங்க வேண்டும்.

நமது முன்னோர்கள் கடைபிடித்த உணவுப் பழக்கங்களைக் கைக்கொண்டால் உடல் நலத்தோடு நீண்ட காலம் வாழலாம்.

**புலனப் பதிவு.**

# தமிழை அழிக்க முயல்கிறது சமற்கிருதம்!

பல தமிழ்ச் சொற்கள் வழக்கொழிந்து சமற்கிருதம் வழக்கில் இருக்கிறது. அவைகளில் சில.

குடமுழுக்கு – கும்பாபிஷேகம்
அருள்மிகு – ஸ்ரீ
கருவறை – கர்ப்பக்கிரகம்
தண்ணீர் – ஜலம்
குளியல் – ஸ்நானம்
அன்பளிப்பு – தட்சணை
வணக்கம் – நமஸ்காரம்
ஐயா – ஜீ
நிலம் – பூலோகம்
வேண்டுதல் – ஜெபம்
தீ – அக்னி
குண்டம் – யாகம்
காற்று – வாயு
விண் – ஆகாயம்
பூ – புஷ்பம்
தொழுதல் – பூஜை
முறைகள் – ஆச்சாரம்
திருமணம் – விவாகம்
பிணம் – சவம்
மக்கள் – ஜனங்கள்
உணர்வற்றது – சடம்
ஒன்பதாம் நாள் – நவமி
பத்தாம் நாள் – தசமி
பிறந்தநாள் – ஜெயந்தி
பருவமடைதல் – ருது
ஆசான் – குரு
மாணவர் – சிஷ்யன்
பள்ளிகள் – வித்யாலயம்
அவை – சபை
கலை – சாஸ்திரம்
ஆடை – வஸ்திரம்
அழகு – சுந்தரம்
முகம் – வதனம்
முடி – கேசம்
உறக்கம் – நித்திரை
உண்மை – சத்தியம்
நல்லது – புண்ணியம்
கெட்டது – பாவம்
கொடை – தர்மம்
அமிழ்தம் – அமிர்தம்
நஞ்சு – விஷம்
சான்று – ஆதாரம்
பெரியது – மஹா
செருப்பு – பாதரட்கைஷ
திருவிழா – உற்சவம்
பயணம் – யாத்திரை
உலகம் – லோகம்



# தமிழ்வழிக் கல்வியில் படித்தவர்களுக்கு இடஒதுக்கீடு!

தமிழ்வழியில் படித்தவர்களுக்கு, அரசு பணிகளில் 20 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டம், கடந்த 2010ஆம் ஆண்டு தி.மு.க.ஆட்சியில் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தில் அ.தி.மு.க. தலைமையிலான தமிழக அரசு கடந்த மார்ச் மாதம் திருத்தம் கொண்டு வந்தது. மேலும் இந்த சட்டத்திருத்தம் கவர்னர் பன்வாரிலால் புரோகித்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருந்தது. இந்தச் சட்டத்திருத்தத்துக்கு 8 மாதங்களுக்குப் பிறகு கவர்னர் ஒப்புதல் அளித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசிதழில் சட்டத் துறைச் செயலாளர் சி.கோபிரவிக்குமார் வெளியிட்ட உத்தரவில் கூறியிருப்பதாவது: தமிழ்வழிக் கல்வியில் பயின்றவர்களுக்கு அரசு பணி நியமனம் வழங்குவதற்கான சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கான இசைவாணையை தமிழக கவர்னர் பன்வாரிலால் புரோகித் வழங்கியுள்ளார். இந்தச் சட்டம் உடனடியாக டிசம்பர் 7ஆம் நாள் முதல் அமலுக்கு வருகிறது. அந்தவகையில் அரசு வேலை வாய்ப்புகளை முன்னுரிமையாகப் பெறுவதற்கு, தேவையான வழிகாட்டி இந்தச் சட்டத்தின் மூலம் வகுக்கப்படுகிறது.

அதன்படி அரசின் நேரடி பணி நியமனங்களை பெறுவதற்கான கல்வித்தகுதியை அந்த நபர் தமிழ்வழிக் கல்வி மூலம் பெற்றிருக்க வேண்டும். அவரே இந்தச் சட்டத்தின்படி தமிழ்வழிக் கல்வியில் பயின்றவர் என்று அழைக்கப்படுவார். அதன்படி, ஒரு அரசு பணிக்கு பத்தாம் வகுப்பு கல்வித்தகுதியாக நிர்ணயிக்கப்பட்டிருந்தால், பத்தாம் வகுப்புவரை அவர் தமிழ்வழிக் கல்வியில் பயின்றிருக்க வேண்டும்.

ஒரு அரசுப் பணிக்கு மேனிலைக் கல்வி அதற்கான தகுதியாக நிர்ணயிக்கப்பட்டிருந்தால், முன்னுரிமையாக அந்தப் பணியை பெறும் நபர் பத்தாம் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்வியில் பயின்றதோடு, மேனிலைக்கல்வி யையும் தமிழில் பயின்றிருக்க வேண்டும். அதுபோல் டிப்ளமோ படிப்பை கல்வித்தகுதியாக ஒரு அரசுப் பணிக்கு நிர்ணயித்திருக்கும் பட்சத்தில், பத்தாம் வகுப்பு மற்றும் தமிழ் வழிக் கல்வியில் படித்திருக்க வேண்டும் அல்லது மேனிலைக்கல்வி படிப்புக்கு பிறகு அவர் டிப்ளமோ முடித்தவராக இருந்தால், அவர் பத்தாம் வகுப்பு மேனிலைக் கல்வி மற்றும் டிப்ளமோ ஆகியவற்றை தமிழ் வழியில் படித்திருக்க வேண்டும்.

ஏதாவது அரசுப் பணிக்கு பட்டப்படிப்பை கல்வித்தகுதியாக அரசு நிர்ணயித்திருந்தால், பத்தாம் வகுப்பு, மேல்நிலைக் கல்வி மற்றும் அந்த பட்டப்படிப்பை, முன்னுரிமை பெற விரும்பும் நபர் தமிழ்வழிக் கல்வியில் கற்றிருக்க வேண்டும். அரசுப் பணிக்கு, முதுநிலை பட்டப்படிப்பை தகுதியாக நிர்ணயிக்கும் பட்சத்தில் பத்தாம் வகுப்பு முதல் முதுநிலைப் பட்டப்படிப்பு வரை அவர் தமிழ்வழிக் கல்வியில் படித்திருக்க வேண்டும்.

# பார்ப்பன மக்கள் தொகை

பார்ப்பன சாம்ராஜ்யம், இரண்டு மாத கடின உழைப்பிற்குப் பிறகு இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களிலும் பார்ப்பன மக்கள் தொகை எவ்வளவு உள்ளதென்பதை அறிய முயற்சித்துள்ளது. இதனடிப்படையில் பட்டியல் தயார் செய்யப் பட்டுள்ளது. பார்ப்பனர்கள் தங்கள் பலமறிந்து ஒற்றுமையாக செயலாற்றுவார்கள்.

1. ஜம்மு காஷ்மீர் : இரண்டு இலட்சம், நான்கு இலட்சம் புலம் பெயர்ந்தவர்கள்.
2. பஞ்சாப் : 9 லட்சம் பார்ப்பனர்கள்.
3. ஹரியானா : 14 லட்சம்
4. ராஜஸ்தான் : 78 லட்சம்
5. குஜராத் : 60 லட்சம்
6. மகாராஷ்ட்ரா : 45 லட்சம்
7. கோவா : 5 லட்சம்
8. கர்நாடகா : 45 லட்சம்
9. கேரளா : 12 லட்சம்
10. தமிழ்நாடு : 36 லட்சம்
11. ஆந்திரா : 24 லட்சம்
12. சத்தீஷ்கர் : 24 லட்சம்
13. ஒடிசா : 37 லட்சம்
14. ஜார்கண்ட் : 12 லட்சம்
15. பீஹார் : 90 லட்சம்
16. மேற்கு வங்கம் : 18 லட்சம்
17. மத்தியப் பிரதேசம் : 42 லட்சம்
18. உத்திரப்பிரதேசம் : 2 கோடி
19. உத்தரகாண்ட் : 20 லட்சம்
20. இமாச்சலப்பிரதேசம் : 45 லட்சம்
21. சிக்கிம் : 1 லட்சம்
22. அஸ்ஸாம் : 10 லட்சம்
23. மிசோரம் : 1.5 லட்சம்
24. அருணாச்சல் : 1 லட்சம்
25. நாகலாந்து : 2 லட்சம்
26. மணிப்பூர் : 7 லட்சம்
27. மேகாலயா : 9 லட்சம்
28. திரிபுரா : 2 லட்சம்

இந்திய மக்கள் தொகையில் 5%

பார்ப்பனர்கள் அதிகம் உள்ள மாநிலம் உத்திரப்பிரதேசம். குறைவாக உள்ள மாநிலம் சிக்கிம். பார்ப்பன ஆதிக்கம் அதிகம் உள்ள மாநிலம் மேற்கு வங்காளம். பார்ப்பனர்கள் அதிகமுள்ள மாநிலம், ஜார்கண்ட், மொத்த மக்கள் தொகையில் 20% பார்ப்பனர்கள்.

பொருளாதாரத்தில் பார்ப்பனர்கள் பின்தங்கிய மாநிலம் கேரளா. பொருளாதாரத்தில் வலிமையாக உள்ள மாநிலம் அஸ்ஸாம். பார்ப்பனர்கள் அதிகமானோர் முதலமைச்சர்களான மாநிலம் உத்திரப்பிரதேசம்.

லோக்சபாவில் பார்ப்பனர்கள் 48%

ராஜ்ய சபாவில் 36%

கவர்னர்கள் 50%

கேபினெட் செயலாளர்கள் 33%

அமைச்சர்களின் செயலாளர்கள் 54%

இந்தியத் தலைமைச் செயலாளர்கள் 62%

பர்சனல் செயலாளர்கள் 70%

அரசியலில் 58%

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்கள் 51%

உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் 56%

உயர்நீதி மன்றங்களில் நீதிபதிகள் 40%

வெளிநாட்டு தூதர்களில் 41%

பப்ளிக் அண்டர்டேக்கிங் துறைகளில் மத்திய அரசில் 57%

மாநில அரசுகளில் 82%

வங்கிகளில் 57%

ஏர்லைன்ஸ்ஸில் 61%

ஐஏஎஸ் 72%

ஐபிஎஸ் 61%

தொலைக்காட்சி கலைஞர்கள் மற்றும் பாலிவுட்டில் 83%

அரசின் முக்கியத் துறைகளில் 61.8%

இட ஒதுக்கீட்டை எதிர்ப்பவர்கள் முழு இடங்களையும் திருட்டுத்தனமாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றனர். இது எப்படி சாத்தியம் என யோசித்தால் புரியும் பார்ப்பன சூழ்ச்சி.

நன்றி : **சுப்பிரமணியம் ராமசாமி.**

புலிகள் உறுமிய வன்னிக்காட்டில் உலவிய “பைந் தமிழ் வேங்கை“ திருமாவளவரை தொட்டுப்பார்!

பொடாவும் தடாவும் அமலில் இருந்த கால கட்டத்திலே ஈழமண்ணை மிதித்த கரிகாலனைத் தொட்டுப்பார்!

மாநில சுயாட்சியினை வலியுறுத்தும் எம் தலை முறையின் மானுடத்து மகானைத் தொட்டுப்பார்!

நீட்டால் கொலை செய்யப்பட்ட அனிதாவுக்கா கவும், காமக்கொடூரர்களால் கொல்லப்பட்ட அரியலூர் நந்தினிக்காவும், தஞ்சை கலைச்செல்விக்காகவும், ஐஸ்வர்யாவுக்காகவும், ஆத்தூர் ராஜலட்சுமிக்காகவும், போராடிய பெண்ணுரிமை போராளியினைத் தொட்டுப்பார்!



சென்னை தலைநகரமே வெள்ளத்தால் மூழ்கிய போது, முட்டளவு தண்ணீரில் சென்று தத்தளித்த பொதுமக்களுக்கு உணவு உடை பரிமாறி ‘தூய்மை’ பணி செய்த உரிமைக்குரலைத் தொட்டுப்பார்!

“சாதி ஒழிப்பே மக்கள் விடுதலை“ என முழங்கும் அங்கனூர் அக்னிசிறுத்தையினைத் தொட்டுப்பார்!

சிங்கள இனவெறி அரசால் கொல்லப்படும் மீனவர்களுக்காகப் போராடிய நெய்தல் நிலத்து முதல்வனைத் தொட்டுப்பார்!

ஒரு நாள், ஒரே ஒருநாள் திருமாவளவரை கைது செய்து பார், அவர் பெயர்ச்சொல்லின் பொருள் புரியும்.

அடைப்புக்குறிக்குள் இருந்த ஆதித்தமிழனை வியப்புகுறியாய் விழிக்க வைத்த திருமாவளவரைத் தொட்டுப்பார்.

தனிக்குவளையில் தண்ணீர் குடித்தவனுக்கு தங்கக்குவளை தந்த ‘சமூக விஞ்ஞானி’ திருமாவள வரைத் தொட்டுப்பார்!

இடுப்பில் கட்டிய துண்டை அவிழ்த்து, மூத்த தமிழனுக்கு முண்டாசு கட்டிய திருமாவளவரைத் தொட்டுப்பார்!

சாதியவாதிகளால் மிதிக்கப்பட்ட சேரி மக்களின் முதுகை நிமிர்த்திய ‘நெம்புகோல்’ திருமாவளவரைத் தொட்டுப்பார்!

விரிந்து கிடக்கும் உலகைக் காண, இருண்டு கிடந்த சேரி இடுக்கில் வெளிச்சம் காட்டிய, ‘விடுதலை நெருப்பு’ திருமாவளவரைத் தொட்டுப்பார்!

ஒடுக்கப்பட்டோருக்கான உரிமைக் களத்தில் உரத்துக் கேவிய ‘பறைமுழக்கம்’ திருமாவளவரைத் தொட்டுப்பார்!

சாதியநெருப்பில் கண்ணீராய் உருகும் மக்களின் வாழ்க்கையை தன்நெஞ்சுக் கூட்டில் வடித்து வைத்த ‘வரலாற் றுச் சிற்பி’ திருமா வளவரைத் தொட்டுப் பார்!

தாழக்கிடந்தவனை தட்டி நிறுத்திய ‘மானங் காத் தான்’ திருமா வளவரைத் தொட்டுப் பார்!

# சங்கிகளே தொட்டுப்பார்!

**இந்திய அரசியல் தலைவர்களுக்கு மத்தியில், நாதியற்ற தமிழகத்தில் துணிவுடன் தீரத்துடன் 'கொள்கைப் பிடிப்பாளனாய், கோட்பாடு தலைவனாய், கருத்தியல் தலைவனாய், சனாதன வானரப்படைகளின் ஆதிக்கத்திமிரினை எதிர்க்கும் 'ஒற்றை ஆளுமைத் தலைவன்' தொல்.திருமாவளவரைத் தொட்டுப்பார்!**

*பண்பாட்டுப் படையெடுத்து, ஆரியத்தின் நெற்றிப் பொட்டில் 'சம்புகனாய்' சதை பிளந்து, சங்கரமடத்து சங்கரனின் வாய்கிழித்து, இந்துத்துவ கருத்தியலை வேரறுக்கும் 'சேனைத்தலைவன்' திருமாவளவரைத் தொட்டுப்பார்!*

*மொழிப்போரில் கருத்தியல் தந்திரத்தையும் அரசியல் களப்போரில் ராஜதந்திரத்தையும் கற்றுச் 'செரித்த களகர்த்தன்' திருமாவளவரைத் தொட்டுப் பார்!*

*ஆண்டாண்டுகாலமாய் கரையேற முடியாமல், காற்றடித்த பக்கமெல்லாம் அலைமோதிய தலித் அரசியலை, ஆதிக்கசாதி அலைகளுக்கு எதிராக துணிந்து நின்று போராடி, தன்னந்தனியாக கரை யேற்றிய 'துடுப்புப் படகு' திருமாவளவரைத் தொட்டுப் பார்!*

*மத்தியிலும் மாநிலத்திலும் ஆளும் பாஜகவின் ஆணவத்தையும் அதிகாரத்திமிரையும் சுட்டிக் காட்டவோ, தட்டிக்கேட்கவோ துணிவின்றி, வருமான வரித்துறைக்கும் அமலாக்கப்பிரிவுக்கும் சிபிஐ விசாரணைக்கும் அஞ்சி நடுங்கி சனாதன காவிகளின் காலை நக்கி, குளிரூட்டப்பட்ட பத்துக்குப் பத்து அறையில் முடங்கிக் கிடக்கும் இந்திய அரசியல் தலைவர்களுக்கு மத்தியில், நாதியற்ற தமிழகத்தில் துணிவுடன் தீரத்துடன் 'கொள்கைப் பிடிப்பாளனாய், கோட்பாடு தலைவனாய், கருத்தியல் தலைவனாய், சனாதன வானரப்படைகளின் ஆதிக்கத்திமிரினை எதிர்க்கும் 'ஒற்றை ஆளுமைத் தலைவன்' தொல். திருமாவளவரைத் தொட்டுப்பார்!*

*சிப்பாய் கலகம் என்ன, திருமா கலகமே வெடிக்கும். பானிப்பட்டுப் போரென்ன, காலாட்போரே வெடிக்கும்.*

*தொட்டுப்பார்! தொட்டுப்பார்! தொட்டுப்பார்!*

**ஞா. புனிதஅரசு,**
*மாநில ஒருங்கிணைப்பாளர்,*
*கிறித்தவ சமூகநிதிப் பேரவை.*
*9080913380.*



# தேசப்பற்று?

ராஜ்நாத் சிங்கின் மகன் இங்கிலாந்தின் 'லீட்ஸ்' பல்கலைக்கழகத்தில் படிக்கிறார்.

நிர்மலா சீதாராமனின் மகள் 'வாங்மயிபரகலா' அமெரிக்காவின் நார்த் வெஸ்ட் பல்கலைக்கழகத்தில் படிக்கிறார்.

வெளி விவகாரத் துறை அமைச்சர் ஜெய்சங்கரின் மகன் 'துருவ்' ஜியாஜ் டவுன் பல்கலைக்கழகத்திலும் மகள் 'மேதா' டெனிசன் பல்கலைக்கழகத்திலும் படிக்கிறார்கள்.

அமைச்சர் புயூஸ்கோயல் மகள் 'ராசிகா' மகன் 'துருவ்' ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் படிக்கிறார்கள்.

அமைச்சர் பிரகாஷ் சவடேகர் மகள் 'அபூர்வா' பாஸ்ட்டன் பல்கலைக்கழகத்தில் படிக்கிறார்.

அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் மகள் 'ஆதித்யா' அமெரிக்காவின் கார்னகி பல்கலைக்கழகத்தில் படிக்கிறார்.

அமைச்சர் சுஜேந்திர சிங் செகாவத் மகள் 'சுபாஷினி' ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் படிக்கிறார்.

அமைச்சர் சஞ்சய் தோத்ரா மகன் 'நகுல்' கார்னகி பல்கலைக்கழகத்தில் படிக்கிறார்.

அமைச்சர் ஹர்தீப்சிங்புரியின் மகள் 'திபோத்தமா' வார்விச் பல்கலைக்கழகத்தில் படிக்கிறார்.

இந்த தேசபக்தர்களின் பிள்ளைகள் எல்லாம் வெளிநாட்டில் படிப்பதுதான் 'மேக் இன் இந்தியாவா'?

இவர்களின் பிள்ளைகள் படிக்கும் கல்விக்கூடங்கள் அனைத்தும் கிறித்தவர்களால் உருவாக்கப்பட்டது என்பதை காவிகள் ஏன் மறந்து போனார்கள்?

# மண்ணின் மக்கள் வேலைத் துண்டறிக்கை கொடுத்த பேரியக்கத் தோழர்களிடம் பா.ச.க.வினர் தகராறு! நடவடிக்கை எடுக்க வேண்டும்!



**பெ. மணியரசன்**

மற்ற மாநிலங்களைப் போல் தமிழ்நாட்டிலும் மண்ணின் மக்கள் வேலை உரிமைச் சட்டம் இயற்றப்பட வேண்டும். தொழில், வணிகம் ஆகியவற்றில் தமிழர்கள் முன்னுரிமைப் பெற்று முன்னேற வேண்டும் என்ற மக்கள் நல நோக்கத்துடன், "தமிழ்நாட்டுத் தொழில் வணிகம் வேலைகள் தமிழர்களுக்கே", என்ற முழக்கத் துடன் தமிழ்த்தேசியப் பேரியக்கம் கடந்த 01.11.2020 முதல் வெளியாரைப் புறக்கணிக்கக் கோரும் ஒத்துழை யாமைப் பரப்புரை செய்து வருகிறது. தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் இப்பரப்புரை கொரோனா முடக்க விதிகளைக் கடைபிடித்து மூவர், நால்வர்க்கு மேல் சேர்ந்து செல்லாமல் நடந்து வருகிறது.

கோயம்புத்தூர் இராமகிருஷ்ணா பகுதி பொன்னையா ராசபுரத்தில் 20.11.2020 வெள்ளிக்கிழமை இரவு 08.30 மணி அளவில் தமிழ்த்தேசியப் பேரியக்கத் தோழர் கு. இராஜேஷ்குமார் மற்றும் தோழர் செல்வராசு இருவரும் அங்கு கடைகளில் மேற்படி ஒத்துழையாமை துண்டறிக்கை கொடுத்துள்ளார்கள். அப்போது அங்கு வந்த பாரதிய சனதாக் கட்சியின் கோவை ஆர்.எஸ்.புரம் மண்டலப் பொறுப்பாளர் இராசரத்தினம் என்பவர் "இந்துக்களுக்கு எதிரான பிரச்சாரம் செய்கிறாய்; நோட்டீஸ் கொடுக்கக் கூடாது என்று மேற்படி இரண்டு தோழர்களையும் தடுத்துள்ளார். அத்துடன் கைப்பேசி யில் பேசி சற்றொப்ப 25 பேர் அளவுக்கு பா.ச.க.வை சார்ந்தவர்களை அழைத்து எல்லோருமாகச் சேர்ந்து இராஜேஷ்குமாரையும், செல்வராசையும் மிரட்டியுள்ள னர்.

அத்துடன், கோயம்புத்தூரில் வெரைட்டி ஹால் B - 3 காவல் நிலையத்திற்கும் கைப்பேசியில் தவறான தகவல்கள் சொல்லிக் காவலர்களையும் அந்த இடத்திற்கு வரச் செய்து விட்டார் இராசரத்தினம்.

உடனே அங்கு வந்த காவல் துறையினர் தோழர்கள் இராஜேஷ்குமாரையும் செல்வராசையும் B - 3 காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விட்டார்கள். இரவு 12 மணி வரை விசாரணை என்ற பெயரில் காவல் நிலையத்தில் அவர்களை வைத்திருந்துவிட்டு, "காவல் நிலைய அனுமதி வாங்காமல், இனிமேல் துண்டறிக் கைகள் கொடுக்க மாட்டேன்" என்று காவல் துறையினர் எழுதிய தாளில் கையெழுத்து வாங்கிக் கொண்டு இருவரையும் விடுவித்துள்ளார்கள். பாரதிய சனதா கட்சியைச் சேர்ந்த இதே இராசரத்தினம் கடந்த 01.11.2020 அன்று எங்கள் அமைப்புத் தோழர்கள் கோவை காந்திப் பூங்காப் பகுதியில் காலை 11 மணியளவில் இதே துண்டறிக் கையை மக்களிடம் கொடுத்துக் கொண்டிருந்த போது, சற்றொப்ப பத்து பேரை அழைத்துக் கொண்டு வந்து துண்டறிக்கை கொடுப்பதைத் தடுத்து தகராறு செய்துள்ளனர். அப்போது அந்தப் பகுதியில் வந்த காவல் துறையினர் தலையிட்டு சிக்கல் வராமல் தடுத்துள்ளனர்.

பா.ச.க.வைச் சேர்ந்த மேற்படி இராசரத்தினமும் மற்றவர்களும் பேரியக்கத் தோழர்கள் துண்டறிக்கைக் கொடுப்பதை, தடுப்பது சட்ட விரோத செயல்; வன்முறைச் செயல்! இந்திய அரசமைப்புச் சட்டம் அமைப்புகளுக்கும் தனி நபருக்கும் வழங்கும் கருத்துரி மையை வன்முறை மூலம் தடுக்கும் செயல், அத்துண்ட றிக்கையின் மீது அவர்களுக்கு மாற்றுக் கருத்து இருந்தால், காவல்துறையினரிடம் எழுத்து வடிவில் அவர்கள் புகார் தெரிவித்திருக்கலாம். அந்த சனநாயகப் பாதையை பின்பற்றாமல் கும்பல் சேர்நது வன்முறை யாகத் தடுக்கும் மேற்படி இரத்தினம் மற்றும் அவரோடு வந்தவர்கள் மீது காவல்துறை தலைமை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்படி பா.ச.க., பொறுப்பாளர் இராசரத்தினம் மற்றும் அவரின் ஆட்கள் விருப்பப்படி சட்டத்திற்கு புறம்பாகச் செயல்பட்டு, இராசேசுகுமாரையும், செல்வராசையும் காவல் நிலைத்திற்கு அழைத்துச் சென்று சட்டத்திற்குப் புறம்பாக எழுதிவாங்கிக் கொண்டு வெளியில் விட்டதற்குப் பொறுப்பான மேற்படி B - 3 காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் காவல் துறையினர் மீது தமிழ்நாடு அரசும், தமிழ்நாடு காவல் துறைத் தலைமையும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ●



# பேரறிவாளன் முன்விடுதலைக்கு
## ஆளுநரை நேரில் சந்தித்து முதலமைச்சர் வலியுறுத்த வேண்டும்!

கி. வெங்கட்ராமன்

***இராசீவ் காந்தி கொலை வழக்கில் நீண்டநாள் சிறையிலுள்ள அ.ஞா. பேரறிவாளன் முன் விடுதலைக்கு தமிழ்நாடு ஆளுநரை நேரில் சந்தித்து தமிழ்நாடு முதலமைச்சர் வலியுறுத்த வேண்டுமென 11.11.2020 அன்று தமிழ்த்தேசியப் பேரியக்கப் பொதுச்செயலாளர் தோழர் கி. வெங்கட்ராமன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதம் :***

*“அரசமைப்புச் சட்ட உறுப்பு 161-இன் கீழ் கருணை அடிப்படையில் தன்னை முன்விடுதலை செய்யக் கோரி ஆளுநருக்கு 31.12.2015 அன்று தான் அளித்த மனுவின் மீது தமிழ்நாடு ஆளுநர் எந்த முடிவும் எடுக்காததை சுட்டிக்காட்டி, உச்ச நீதிமன்றத்தில் அ.ஞா. பேரறிவாளன் தொடுத்த வழக்கில் கடந்த 03.11.2020 அன்று உச்ச நீதிமன்றம் ஆளுநரை இடித்துரைத்து வழங்கியிருக்கும் அறிவுறுத்தல் மிக முக்கியமானது.*

இராசீவ்காந்தி கொலையில் பன்னாட்டு சதிகள் குறித்து விசாரித்து வரும் பல்நோக்கு கண்காணிப்பு விசாரணை முகமையின் (MDMA) இறுதி அறிக்கை கிடைத்தப் பிறகுதான், பேரறிவாளன் முன்விடுதலை மீது முடிவெடுக்கப்படும் என ஆளுநர் அலுவலகம் தெரிவித்திருப்பது பொருத்தமற்றது - தொடர்பில்லாதது என்று நீதிபதிகள் நாகேசுவரராவ், ஏமந்தகுப்தா, அஜய் ரஸ்தோகி ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு தெளிவுபடக் கூறிவிட்டது.

பேரறிவாளன் வழக்கில் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ள இந்தக் கருத்து, இராசீவ்காந்தி கொலை வழக்கில் நீண்டநாள் சிறையில் வாடும் பிறருக்கும் பொருந்தக் கூடியதே!

எனவே, பேரறிவாளன் முன்விடுதலை குறித்து, தமிழ்நாடு அரசு ஆளுநருக்கு அழுத்தம் கொடுத்தால், தங்கள் தலைமையிலான அமைச்சரவையின் 09.09.2018பரிந்துரைப் படியான ஏழு தமிழர் விடுதலைக்கு வழி ஏற்படுத்தும்.

எனவே, தமிழ்நாடு முதலமைச்சராகிய தாங்கள் ஆளுநரை சந்தித்து, முதல் கட்டமாக பேரறிவாளன் முன் விடுதலையை வலியுறுத்த வேண்டுமென்று தமிழ்த் தேசியப் பேரியக்கம் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கான சட்டவழிப்பட்ட நீதியான காரணங்களை சுருக்கமாகத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**இருபதாண்டுகளையும் கடந்த நீண்டகால சிறை வாசம் என்பதோடு, முதன் முறையாக குற்றம் செய்தவர் என்பதும், சிறையில் இருக்கும்போது தனது கல்வித் தகுதியை உயர்த்திக் கொண்டவர் என்பதும் முன் விடுதலைக்கு முக்கியத் தகுதிகளாகக் கொள்ளப்பட்டன. பேரறிவாளனுக்கு உச்ச நீதிமன்றம் கூறிய முன் விடுதலைக்கான தகுதிகளையும் தேவைகளையும் தாண்டி, அதிகமாகவே உள்ளன.**

கால் நூற்றாண்டையும் கடந்து நீண்டநாள் சிறையாளியாக வாடிவரும் அ.ஞா. பேரறிவாளன் அரசமைப்புச் சட்ட உறுப்பு 161-இன்படி தனக்கு முன்விடுதலை வழங்குமாறு 31.12.2015 நாளிட்ட தனது மனுவின் மூலம் தமிழ்நாடு ஆளுநரை வேண்டிக் கொண்டார்.

பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு தமிழர் விடுதலைக்கு அன்றைய முதலமைச்சர் செயலலிதா அவர்கள், குற்றவியல் சட்ட விதி 432இன் கீழ் முடிவு செய்தபோது, இந்திய அரசு அதில் குறுக்கிட்டு நீண்ட நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் இறுதியில் 02.12.2015 அன்று உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தத்து தலைமையிலான அரசமைப்பு ஆயம் தீர்ப்பளித்தது. நீதிபதி கலிபுல்லா பெரும்பான்மைத் தீர்ப்பை முன்வைத்தார். முன்விடுதலை தொடர்பான மாநில அரசின் அதிகாரங்கள் பலவற்றை அத்தீர்ப்பு பறிப்பதாக இருந்தாலும், அரசமைப்பு உறுப்பு 161இன்படி உள்ள மாநில அரசின் தண்டனைக் குறைப்பு அதிகாரம் கட்டற்றது, எந்தக் குறுக்கீட்டுக்கும் அப்பாற்பட்டது, எந்த நேரத்திலும் செயல்படக் கூடியது என்று உறுதிபடக் கூறியது.

இந்தப் பின்னணியில், உறுப்பு 161இன்படியான தனது மனுவின் மீது ஆளுநர் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், உச்ச நீதிமன்றத்தை பேரறிவாளன் அணுகினார். அதன்மீது உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி இரஞ்சன் கோகாய் அமர்வு அரசமைப்புச் சட்ட உறுப்பு 161இன்படியான ஆளுநரின் - அதாவது மாநில அரசின் கட்டற்ற அதிகாரத்தை எடுத்துக்கூறி பேரறிவாளன் முன்விடுதலை மனுவின் மீது விரைந்து முடிவெடுக்குமாறு 06.09.2018 அன்று ஆணையிட்டது. இதனைத் தொடர்ந்து, தங்கள் தலைமையிலான தமிழ்நாடு அமைச்சரவை பேரறிவாளன் மட்டுமின்றி, நளினி, முருகன், சாந்தன், செயக்குமார், இராபர்ட் பயஸ், இரவிச்சந்திரன் ஆகியோரையும் விடுதலை செய்ய வேண்டுமென்று 09.09.2018 அன்று வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவெடுத்து ஆளுநருக்கு பரிந்துரை அனுப்பினீர்கள்.

இரண்டாண்டுகள் கடந்த பின்னும் ஆளுநர் அதன்மீது எந்த முடிவும் எடுக்காத நிலையில், பேரறிவாளன் உச்ச நீதிமன்றத்தை அணுகினார். அதன்மீது 21.01.2020 அன்று உச்ச நீதிமன்றம் தமிழ்நாடு அரசுக்கு அறிவுறுத்தல் வழங்கியது. அதில், "அரசமைப்புச் சட்ட உறுப்பு 161இன் கீழ் பேரறிவாளன் அளித்த மனுவின் மீது 06.09.2018 நாளிட்ட உச்ச நீதிமன்ற வழி காட்டுதலின் அடிப்படையில் ஏதேனும் முடிவெடுக்கப் பட்டிருக்கிறதா எனத் தெரிவிக்க வேண்டும்" என ஆணையிட்டது.

அதன்மீது அடுத்த விசாரணை நாளில் 11.02.2020 அன்று தனது பதிலுரையை தமிழ்நாடு அரசு தாக்கல் செய்தது. 09.09.2018 அன்று தமிழ்நாடு அமைச்சரவை அளித்த பரிந்துரையையும் அதன் மீது ஆளுநருக்கு அனுப்பப் பட்ட நினைவூட்டல் கடிதங்களையும் எடுத்துக் காட்டிய தமிழ்நாடு அரசு வழக்குரைஞர், இதற்கு மேல் ஆளுநரை இந்தக் கால வரம்பிற்குள் கையெழுத்திடுமாறு மாநில அரசால் வற்புறுத்த முடியாது என்று விளக்கமளித்தார்.

இந்த நிலையில், உச்ச நீதிமன்றத்தில் இதனை பேரறிவாளன் வழக்கறிஞர்கள் எடுத்துக் கூறினர். உச்ச நீதிமன்றம் வலியுறுத்திக் கேட்டதற்குப் பிறகு, "இராசீவ் காந்தி கொலை வழக்கில் பன்னாட்டுச் சதிகள் குறித்து விசாரித்துவரும் பல்நோக்கு விசாரணை முகமையின் இறுதி அறிக்கை வந்த பிறகுதான் இதன் மீது ஆளுநர் முடிவெடுப்பார்" என்று தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்துதான் 03.11.2020 அன்று உச்ச நீதிமன்றம் சட்டநிலையைத் தெளிவுபடுத்திக் கூறியது. அத்தோடு, பொருத்தமான காரணமில்லாமல் முன்விடுதலையின் மீது ஆளுநர் காலதாமதம் ஏற்படுத்துவது குறித்து தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது.

பேரறிவாளன் முன்விடுதலை குறித்து, சட்ட நிலைமைகளையும் நீதிமன்றத் தீர்ப்புகளையும் எடுத்துக் காட்டி, தமிழ்நாடு அரசு ஆளுநரை வலியுறுத்தலாம் என்றும் அறிவுறுத்தியது.

முடிவெடுப்பதில் தேவையற்ற காலதாமதம் ஏற்பட்டால், அரசமைப்புச் சட்ட உறுப்பு 142 வழங்கும் சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, பேரறிவாளன் விடுதலைக்கு ஆணையிட முடியும் என்றாலும், இந்தக்

*கட்டத்தில் அவ்வாறு தலையிட விரும்பவில்லை என்றும் தனது மனநிலையை தெளிவுபடுத்தியது.*

*இதற்கு ஆதரவாக தமிழ்நாடு உள்துறைச் செயலாளர் (சிறைத்துறை) - எதிர் - நிலோபர் நிஷா* (Criminal Appeal No (s). 144 of 2020, (@ Special Leave Petition (CRL) No(s). 626 of 2020), (@ Special Leave Petition (CRL) D. No. 18046 of 2019) *வழக்கில் 23.01.2020 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பையும், சாபே எதிர் உத்திரப்பிரதேச மாநில அரசு* (Special Leave Petition (CRL) No. 7369 of 2019) *வழக்கில் 30.09.2020 அன்று உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் பேரறிவாளன் தரப்பு எடுத்துக்காட்டியதை ஏற்றுக் கொண்டது.*

*முன்விடுதலை குறித்து கடைசியாக வந்து தீர்ப்பான சதீஷ் என்ற சாபே - எதிர் - உத்திரப்பிரதேச மாநில அரசு வழக்கில் முன்விடுதலைக்கு உச்ச நீதிமன்றம் கூறிய காரணங்கள் இங்கு கவனத்தில் எடுத்துக் கொள்ளத் தக்கவை.*

*இருபதாண்டுகளையும் கடந்த நீண்டகால சிறை வாசம் என்பதோடு, முதன் முறையாக குற்றம் செய்தவர் என்பதும், சிறையில் இருக்கும்போது தனது கல்வித் தகுதியை உயர்த்திக் கொண்டவர் என்பதும் முன் விடுதலைக்கு முக்கியத் தகுதிகளாகக் கொள்ளப்பட்டன.*

*பேரறிவாளனுக்கு உச்ச நீதிமன்றம் கூறிய முன் விடுதலைக்கான தகுதிகளையும் தேவைகளையும் தாண்டி, அதிகமாகவே உள்ளன.*

- *அ.ஞா. பேரறிவாளன் முதல் முறையாக குற்றம் செய்தவராக அறியப்பட்டிருக்கிறார்.*

- *அவரது முப்பதாண்டு கால சிறை வாழ்வில் தமிழ் நாட்டின் பல்வேறு சிறைகளில் இருந்தாலும் எல்லா சிறைகளிலும் சிறை அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்று, நன்னடத்தைச் சான்று பெற்றவராகத் திகழ்கிறார்.*

- *தனது 19 வயதில் சிறைக்குச் சென்றவர் அதன் பிறகு தனது சிறை வாழ்க்கையின் ஊடாக பல துறை களில் ஏறத்தாழ 12க்கும் மேற்பட்ட பட்டங் களையும், பட்டயங்களையும் சான்றிதழ் படிப்புகளையும் முடித் திருக்கிறார்.*

- *சக சிறையாளிகளுக்கு உதவி செய்தும் கல்வி புகட்டியும் அவர்களை நன்னெறிப் படுத்தியும், எடுத்துக் காட்டான சிறையாளியாகத் திகழ்ந்திருக்கிறார்.*

- *இராசீவ்காந்தி கொலை வழக்கில் இவர் மரண தண்டனை பெற்றதற்கு ஒரே அடிப்படை - தடா சட்டப் பிரிவு 15இன் கீழ் அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமே ஆகும். இந்த ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற்ற - விசாரணையின்போது மாவட்டக் காவல் கண்காணிப் பாளராக இருந்து, டி.ஜி.பி. பதவி வரை உயர்வு பெற்று ஓய்வுபெற்ற - காவல்துறை அதிகாரி திரு. வி. தியாகராசன் ஐ.பி.எஸ்., அவர்கள், பேரறிவாளனின் மரண தண்டனைக் குக் காரணமான ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பெற்றதில் தான் மிகப்பெரிய தவறு செய்து விட்டதாக உச்ச நீதிமன் றத்திலேயே 26.10.2017இல் உறுதியுரை (பிரமாணப் பத்திரம்) அளித்திருக்கிறார்.*

*பேரறிவாளன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சொல்லுக்குச் சொல் பதிய வேண்டிய சட்டக் கடமையி லிருந்து தவறி விட்டதாகவும், குறிப்பாக - இராசீவ்காந்தி கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படும் 9 வோல்ட் பேட்டரியை தான் தான் வாங்கி வந்ததா கவும், ஆனால் அது எதற்கு வாங்கப் படுகிறது என்று எனக்குத் தெரியாது என்றும் பேரறிவாளன் கூறியதை, தான் பதிவு செய்யாமல் விட்டதால் அந்த ஒரே வாக்கு மூலத்தின் காரணமாக இந்த வழக்கில் அவர் மரண தண்டனை பெற்றார் என்று குறிப்பிட்டிருக்கிறார்.*

- *இராசீவ்காந்தி கொலையில் ஈடுபட்ட மனித வெடிகுண்டு பயன்படுத்திய ஐ.இ.டி. பேட்டரி எங்கே வாங்கப்பட்டது, எந்தத் தன்மையானது என்பது குறித்து அறுதியிட்டு முடிவான முடிவுக்கு வர முடியவில்லை என்று பன்நோக்கு விசாரணை முகமை இடைக்கால அறிக்கையில் கூறியிருக்கிறது. இச்சிக்கல் குறித்த ஜெயின் ஆணைய அறிக்கையும் அவ்வாறே கூறியிருக்கிறது.*

- *பேரறிவாளன் மரண தண்டனையை உறுதிசெய்து தீர்ப்பளித்த உச்ச நீதிமன்ற அமர்வுக்குத் தலைமை தாங்கிய நீதிபதி கே.டி. தாமஸ், தனது பணி ஓய்வுக்குப் பிறகு இந்த வழக்கில் அளிக்கப்பட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பு சட்டப்படி தவறானது* (Bad in Law) *என இந்தியன் எக்ஸ்பிரஸ், ஏசியன் ஏஜ் உள்ளிட்ட ஏடுகளுக்கும், பல்வேறு தொலைக் காட்சிகளுக்கும் அளித்த பேட்டி களில் பலமுறை கூறிவிட்டார்.*

- *இராசீவ்காந்தி கொலை சதித்திட்டம் தணு, சிவராசன், சுபா ஆகிய மூன்று பேரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது என்பதை ஏற்றுக் கொண்ட பிறகு, தனது தலைமையிலான உச்ச நீதிமன்ற அமர்வு கொலைச் சதிக்காக 3 பேருக்கு மரண தண்டனையும், 4 பேருக்கு வாழ்நாள் சிறையும் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது தான் தவறானது என நீதிபதி கே.டி. தாமஸ் கூறுகிறார்.*

- *அ.ஞா. பேரறிவாளன் தனது நீண்ட சிறை வாசத் தின் காரணமாக பல்வேறு நோய்களுக்கு ஆட்பட்டிருக் கிறார். குருதி அழுத்தம், சிறுநீரகக் கோளாறு, கீல்வாதம், தூக்கமின்மை போன்ற பல்வேறு நோய்களால் பேரறி வாளன் துன்புற்று வருவதை தமிழ்நாடு சிறைத்துறை நீதிமன்றங்களில் அளித்த மருத்துவ அறிக்கையிலேயே உறுதி செய்திருக்கிறது. அவர் வெளியில் சிகிச்சைப் பெற வேண்டிய அவசர - அவசியத்தில் இருக்கிறார்.*

- *பேரறிவாளன் அவரது பெற்றோருக்கு ஒரே ஆண் மகனாவார். அவரது இரண்டு சகோதரிகளும் திருமண மாகி அவரவர் இல்லங்களில் இருக்கிறார்கள். இந்த நிலையில், தனித்து வாழும் மூத்த வயதுடைய பெற்றோரை கவனிப்பதற்கு பேரறிவாளனைத் தவிர வேறு யாரும் கிடையாது.*

• பேரறிவாளன் தாயார் அற்புதம் அம்மாள், பேரறிவாளனின் விடுதலைக்காகவே கடந்த முப்ப தாண்டுகளாக அலைந்து அலைந்து சோர்ந்து, தனது 72ஆவது வயதில் குருதி அழுத்தம், தூக்கமின்மை, தீராத மூட்டுவலி உள்ளிட்ட பல நோய்களுக்கு ஆளாகி அவதிப்படுகிறார்.

• பேரறிவாளன் தந்தையார் ஞானசேகரன் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். மாணவர்களை ஒழுக்கநெறியோடு கட்டுப்பாடாக வளர்த்தெடுத்ததில் கல்வித் துறையால் பலமுறை பாராட்டப்பட்டவர். சிறந்த கவிஞர். அவர் 78 வயதில் மூப்பின் காரணமாக வரக்கூடிய பல்வேறு நோய்களுக்கு ஆளாகி, தற்போது இடுப்பு எலும்பு முறிவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகிறார். அவருக்கு பேரறிவாளனின் துணை இப்போது அதிகமாகவே தேவைப்படுகிறது.

இவ்வாறான ஞாயமான காரணங்களை எடுத்துக்கூறி உச்ச நீதிமன்றத்தின் கருத்தையும் வலியுறுத்தி, ஆளுநரை நேரில் சந்தித்து தாங்கள் பேரறிவாளன் விடுதலையை வற்புறுத்த வேண்டியது அவசரப் பணி என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வரும் 23.11.2020 அன்று, உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு வருகிற நிலையில், அதற்கு முன்பாகவே ஆளுநரை வலியுறுத்துவது பேரறிவாளன் விடுதலைக்கு வாய்ப்பளிக்கும் என நம்புகிறேன். அவ்வாறு சந்தித்து விட்டு, அதன்நிலையை 23.11.2020 அன்று உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் தெரிவித்தால், ஒருவேளை இதில் காலதாமதமானாலும் உச்ச நீதி மன்றத்தின் வழியாக தீர்வு ஏற்பட வாய்ப்பளிக்கும்.

பேரறிவாளன் முன்விடுதலையை வெற்றிகரமாக முடித்துவிட்டால், அது இவ்வழக்கில் உள்ள பிற ஆறு தமிழர்களின் முன்விடுதலைக்கும் வழி திறந்துவிடும்! அமைச்சரவையின் பரிந்துரையை செயலுக்குக் கொண்டு வருவதற்கும் உற்ற வழியாகத் திகழும்!

இதில் தாங்கள் சிறப்பாக செயல்பட்டால் அது தங்களுக்கு - தமிழ்நாட்டுத் தமிழரிடையே மட்டுமின்றி, உலகம் முழுவதும் பரவிவாழும் தமிழரிடையே பெருமை யையும், நற்பெயரையும் பெற்றுத் தரும் என்பது திண்ணம்!

எனவே, தாங்கள் தமிழ்நாடு ஆளுநர் அவர்களை உடனடியாகச் சந்தித்து பேரறிவாளன் விடுதலைக்கு தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டுமென தமிழ்த் தேசியப் பேரியக்கம் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கிடையில், தமிழ்நாடு தண்டனைகள் தற்காலிக நிறுத்த விதிகளின் (Tamilnadu Suspension of Sentence Rules - 1982) விதி 40 அளிக்கும் சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்தி, பேரறிவாளனுக்கு நீண்டகால சிறை விடுப்பு அளித்து ஆணையிடுமாறும், பிற அறுவருக்கும் இவ்வாறான ஆணையிடுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்".

நன்றி : **தமிழ்த்தேசியத் தமிழர் கண்ணோட்டம் ( டிசம்பர்2020)**

# ஆபாசத்தைப் பரப்பும் கருத்தடை, உள்ளாடை விளம்பரங்களை ஒளிபரப்ப நிரந்தரத் தடை தேவை!

*ம. இலெட்சுமி*




**வி**ருதுநகர் மாவட்டம் இராசபாளையத்தைச் சேர்ந்த சகாதேவராசா என்பவர் உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் பொதுநல வழக்கை தாக்கல் செய்திருந்தார். அதில், தொலைக்காட்சிகளில் ஆபாசத்தைப் பரப்பும் வகையில் கருத்தடை சாதனங்கள், பாலியல் சிக்கல் தொடர்பான மருந்துகள், உள்ளாடைகள், சோப்புகள் போன்றவற்றிற்கான விளம்பரங்கள் ஒளிபரப்பப்படு வதைச் சுட்டிக் காட்டி, அவ்விளம்பரங்கள் இளை ஞர்கள் மனதை கெடுத்து சீரழிப்பதால் அவற்றிற்குத் தடை கோரியிருந்தார்.

கடந்த 12.11.2020 அன்று மதுரை உயர் நீதிமன்ற நீதிபதிகள் கிருபாகரன், புகழேந்தி அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. இந்த ஆபாச விளம்பரங்கள் ஒளிபரப்ப இடைக்காலத் தடை விதித்துள்ளது.

மேலும், இது குறித்து நடுவண் தகவல் தொழில் நுட்பத் துறைச் செயலர், தமிழக செய்தி, திரைப்பட தொழில்நுட்ப மற்றும் திரைப்பட சட்டத்துறைச் செயலர் ஆகியோர் 2 வாரங்களுக்குள் பதிலளிக்க ஆணையிட்டு வழக்கை ஒத்திவைத்துள்ளனர்.

இந்த வழக்கைத் தொடுத்த இராசபாளையம் சகா தேவராசா அவர்களுக்கும் இடைகாலத் தடைவிதித்த நீதிபதிகள் கிருபாகரன், புகழேந்தி ஆகியோருக்கும் மகளிர் ஆயம் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் காட்சி ஊடகங் களில் இவ்வாறான ஆபாச விளம்பரங்களை நிரந்த ரமாகத் தடை செய்து ஆணையிட வேண்டும்!

# பஞ்சாப் உழவர் போர் பாடமாகட்டும்

மோடி அரசின் மூன்று வேளாண் சட்டங்களும், உழவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றும் உள்நோக்கம் கொண்டவை. அவற்றுள் ஒப்பந்தப் பண்ணையச் சட்டம் என்பது, பெருங்குழுமங்களிடம் உழவர்கள் தங்கள் நிலத்பை? பதிவு செய்து கொண்டு அப்பெறுநிறுவனங்கள் சொல்லும் பயிரைச் சாகுபடி செய்து, விளைச்சலை அப் பெருங்குழுமத்திடம் விற்கும் விதிமுறைகளைக் கொண்டது. மக்களுக்கு இன்றியமையாப் பண்டங்கள் என்று வரையறுக் கப்பட்டிருந்த அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள், உருளைக் கிழங்கு, வெங்காயம், தக்காளி முதலிய வற்றை அப்பட்டியலில் இருந்து நீக்கி பெருங்குழுமங்கள் அவற்றைப் பதுக்கி வைத்து விற்க, வாய்ப்பளித்துள்ளது இன்னொரு சட்டம்.

நெல், கோதுமை உள்ளிட்ட வேளாண் உற்பத்திப் பொருட் களுக்கு இப்பொழுதுள்ள குறைந்த அளவு ஆதரவு விலை யையும் நீக்கி, உழவர்கள் தனியாரிடம் பேரம் பேசி கன்னியா குமரியிலிருந்து காசுமீர் வரை கொண்டுபோய் விற்றுக் கொள்ளலாம் என்கிறது இன்னொரு சட்டம்! இதன்படி அரசு கொள்முதல் நிலையங்கள் மூடப்பட்டுவிடும்!

இந்த உழவர் ஒழிப்புச் சட்டங்களை எதிர்த்து, பஞ்சாப் உழவர்கள் சூன் மாதத்திலிருந்து போராடி வருகிறார்கள். அரசமைப்புச் சட்டநாளான 26.11.2020 அன்று தில்லியில் முற்றுகைப் போராட்டம் நடத்துவதற்காக, அன்று காலையே உழுவை ஊர்தி உள்ளிட்ட பல்வேறு ஊர்திகளில் தில்லி நோக்கி ஆண்கள், பெண்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் புறப்பட்டனர். அரியானாவில் உள்ள பா.ச.க. ஆட்சி சாலை களில் தடுப்புகள் வைத்தும் – மின்சாரம் பாயும் கம்பிகளைக் குறுக்கே கட்டியும் உழவர்களைத் தடுத்து பஞ்சாப் மக்கள் மீது குளிர்நீரைப் பீய்ச்சி அடித்தது. தடியடி நடத்தியது; பலரைத் தளைப்படுத்தியது.

ஆனால் வற்றாத வெள்ளம் போல் வந்த பஞ்சாப் மக்களை அரியானாக் காவல் துறையினரால் தடுக்க முடிய வில்லை. தடுப்புகளைத் தூக்கி வீசியும், பல்வேறு குறுக்குப் பாதைகள் வழியாகவும் உழவர்கள் தில்லி செல்லும் சாலையை அடைந்து தில்லியை நோக்கி விரைந்தனர். இவர்களோடு அரியானா உழவர்களும் சேர்ந்தனர். தில்லி எல்லையில் திக்ரி என்ற இடத்தில் அவர்களை காவல்துறை தடுத்து வைத்துள்ளது. (இது 29.11.2020 அன்று எழுதப்பட்ட ஆசிரியவுரை).

தில்லிச் சாலையில் நீண்ட தொலைவிற்கு பல கிலோ மீட்டர் வரை மக்கள் குவிந்துள்ளனர் தாங்கள் வந்த வண்டிகளிலும் தனி ஊர்திகளிலும் சமையல் பொருட்களும் சமையல் பாத்திரங்களும் கொண்டுவந்துள்ளார்கள். எரிபொருள், அடுப்பு எல்லாம் வைத்துள்ளார்கள். ரொட்டி சுட்டுச் சாப்பிடுகிறார்கள். இத்துடன் தில்லியில் சீக்கிய குருத்துவாராக் களில் இருந்து உணவுப் பொருட்கள் வருகின்றன. உத்தர காண்ட், உத்தரப்பிரதேசத்திலிருந்தும் புதுதில்லி முற்றுகைக் குப் பல்லாயிரக்கணக்கான உழவர்கள் வந்தார்கள். புது தில்லி எல்லையில் அந்தப்பக்கம் அவர்களும் தடுக்கப்பட்டுள் ளார்கள்.

இந்திய உள்துறை அமைச்சர் அமித்சா, “புது தில்லியில் புராரிப் பகுதியில் நிரங்காரித் திடலுக்கு வாருங்கள்; அங்கு ஆர்ப்பாட்டம் போராட்டம் நடத்துங்கள்; உங்கள் தலைவர்க ளுடன் பேச்சு நடத்தி முடிவு காணுவோம்” என்று அழைப்பு விடுத்தார். ஆனால் உழவர் தலைவர்கள், ஜந்தர் மந்திர் திடலில் அனுமதிங்கள்; நிரங்காரித்திடல் சிறியது, அங்கு வரமுடியாது என்று கூறிவிட்டுப் போராடுகின்றனர். மோடி அரசு திக்கு முக்காடி நிற்கிறது. “கொரோனாத் தொற்றால் உங்களுக்கு உயிரிழப்பு ஏற்படும்; கலைந்து செல்லுங்கள்” என்றனர் இந்திய ஆட்சியாளர்கள். “உங்கள் சட்டத்தால் வேளாண்மை அழிந்து சாகத்தான் போகிறோம்; அதற்கு மாறாகப் போராடி சாகிறோம்” என்று உழவர்கள் கூறிவிட்டார்கள்!

தமிழர்களே, தமிழ்நாட்டில் ஏன் இவ்வாறு நம்மால் போராட முடியவில்லை? நம்முடைய உழவர்களும் மக்களும் பெரும் பாலும் தேர்தல் கட்சிகளின் செல்வாக்கிற்கு உள்ளாகிப் போர்க் குணத்தை – வீரத்தை இழந்துள்ளார்கள். வாக்களிப்பதே – வாழ்வுரிமைக்கான முதன்மை வழி என்ற மயக்கத்திற்கு மக்களை இக்கட்சிகள் மாற்றியுள்ளன. இக்கட்சிகளின் தலைவர்கள் ஆட்டு மந்தை, மாட்டு மந்தை போல், மக்களை ஓட்டு மந்தையாகப் பழக்கப்படுத்தி சீரழித்துள்ளனர். இத் தலைவர்கள் மக்களைப் பலியிட்டுத் தாங்கள் வாழ்கிறார்கள்!

பஞ்சாபிலே சீக்கியர்கள் தங்களைத் தனி இனமாக – வீர மரபாகக் கருதும் உளவியல் பெற்றுள்ளார்கள்! தமிழர்களே பஞ்சாப் உழவர்கள் நடத்தும் போராட்டத்திலிருந்து பாடம் பெறுங்கள்! அடுத்த பாடம், ஆயுதப் போராட்டம் இல்லாமல் நடக்கும் வெகுமக்கள் புரட்சி – தாக்கத்தை ஏற்படுத்தும், ஆளுவோரின் அரசு எந்திரத்தை முடக்கும் என்பதற்கு இது இன்னொரு எடுத்துக்காட்டு! உழவர்களை நிலத்தைவிட்டு வெளியேற்றி, நிலங்களைப் பெருங்குழுமங்களிடம் ஒப் படைப்பது; பொது மக்களுக்கான ஞாயவிலைக் கடைகளை நிரந்தரமாக மூடிவிடுவது என்ற சதி நோக்கத்துடன் மோடி அரசு கொண்டு வந்துள்ள மூன்று வேளாண் சட்டங்களையும் விரட்டிடத் தமிழ்நாட்டிலும் போராட அணி வகுப்போம்!

நன்றி : தமிழ்த்தேசியத் தமிழர் கண்ணோட்டம் (தலையங்கம்)



1994 - 95 இல் திருவாரூர் மாவட்டம், வடுவூர் மேல்நிலைப்பள்ளியில் 9 ஆம் வகுப்பு மாணவன் நான்! அந்தப் பள்ளி நாட்களின் பசுமையான ஈர நினைவுகள் என் மனத்தில் இப்போதும் வண்ணத்துப் பூச்சியாய் சிறகு விரிகிறது..

வெள்ளைச் சட்டை / வெள்ளை வேட்டி / வெள்ளைச் சிரிப்பு / வடுவூர் பள்ளியின் / வகுப்பறையில் / ஓர் பகல் பௌர்ணமி! அவர்தான் என் வகுப்பு தமிழாசிரியர் பூவைசாரதி!

கசங்கிய வெள்ளைச்சட்டையில் அங்காங்கே சேர் சகதிகள் வரைந்த ஆடையோடு பள்ளிக்கு நுழையும் மாணவன் நான்! என் தமிழாசிரியர் சாரதியோ, தூய்மையே தோற்கும் வெள்ளைச் சட்டை வேட்டி கட்டிக் கொண்டு சிரிப்பவர்! அவரிடம் உள்ள உள்ளத் தூய்மையும், ஆடைத்தூய்மையும் நான் எங்கும் இதுவரை கண்டதில்லை, ராம்ராஜ் காட்டன் சாரதி வேட்டிகூட இந்த சாரதியிடம் பாடம் கற்கவேண்டும்.

என் ஆசான் சாரதியை "வெள்ளைச்சட்டை போட்ட பாரதி" என்று நான் படிக்கும் வயதிலேயே எழுதியவன்!

நான் வடுவூர் பள்ளியில் படிக்கும் நாட்களில் வறுமையை வயிற்றிலும், கருமையை உடம்பிலும் சுமந்தவன்! என் நிறத்தைப் பார்த்தே நான் யாரென்று வடுவூர் பள்ளியில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர் களுக்கும் கண்டறிவர். ஏன் தெரியுமா? சாதியின் அடை யாளத்தைதான் பள்ளி காலர்சீப் காட்டிக் கொடுத்து விடுமே! ஆனாலும் நான் நன்றாக படிக்கும் பள்ளி முதல் மாணவன் என்பது அங்குள்ளோர் அனைவரும் அறிந்ததுதான் ஆகவே கொஞ்சம் கருணையுள்ள சலுகை!

நான் வகுப்பறையில் முதல் மாணவனாக முதல் வரிசையில் இருந்தாலும், என் வகுப்பு அறிந்து வகுத்து ஒதுக்கப்பட்டவனாகவே இருந்தவன். அந்த வலி என் உன் மனத்தை இப்போதும் குத்தி கொண்டுதான் இருக்கிறது. அதனால்தான் இந்த சமூகத்தை, நிகரமைச் சமூகமாக மாற்றும் எழுத்துப்பணியை நான் கையில் ஏந்தினேன்!

அன்று என் வலியை உணர்ந்து எனக்கு வழிகாட்டி யவர்; எனக்கு ஒளிகூட்டியவர் ஆசான் பூவைசாரதி அவர்கள்!

முதன் முதலில் மாவட்ட அளவில் இந்தியன் வங்கி சார்பில் பள்ளியில் கட்டுரைப் போட்டி - பேச்சுப் போட்டி ஓவியப் போட்டி - பாட்டுப்போட்டி அனைத் திலும் நானே முதல் பரிசை வென்றேன்! என் கையெழுத்து அழகைப் பார்த்து நீ வருங்காலத்தில் அண்ணல் அம்பேத்கர் போல் வரவேண்டும் என்றார்!




# ஆசிரியருக்கும் - மாணவருக்கும் ஒரே நாளில் ஒரே விருது!

அது வார்த்தை இன்று வரை என்னை ஏதோ செய்து கொண்டுதான் இருக்கிறது.

அன்று நான் போட்டியில் வெல்ல எனக்கு அரணாக நின்றவர் என் தமிழாசிரியர் பூவைசாரதிதான்!. நான் போட்டியில் வென்று முதற் பரிசு வாங்கியதும் நேராக சென்று அவரிடம் கொடுத்தேன். அன்று அவர் கண் கலங்கிய காட்சி இன்றும் கண்ணில் நீர் வார்க்கிறது. தன் மகனை போல் அன்று ஆரத்தழுவிய ஆசான் எனக்கு எப்போதுமே என் ஆண் தாய்தான்!

பள்ளித் தேர்வுக்களுக்கு எனக்கு பணம் கட்டுவதி லிருந்து, புதுஅடை வாங்கிக் கொடுப்பதிலிருந்து எனக்கு எல்லாமுமாக இருந்தவர். இன்றும் இருப்பவர்! பாரதியின் கவிதைகளையும், பாரதிதாசனின் கவிதை களையும் வைரமுத்துவின் பாடல்களையும் சங்க இலக்கிய சந்தங்களையும் எனக்குள் கடத்திய பெருமகன் அவர்! அவரை என் பள்ளி ஆசிரியர் என்பதை விட எனக்கு கவிதை ஆசிரியர் என்றே சொல்லலாம்! அவர் கலந்து கொள்ள முடியாத கவியரங்குகளில் அவர் கவிதையை நான் வாசித்து நான் அவராகவே அன்று ஆகிப்போனேன்!

அவரோடு சேர்ந்து எங்கள் கிராம வயல் வரப்பு களில் கூத்தாடியதையும், பம்பு செட்டுகளில் குளித்து விளையாடியதையும் இன்றும் என் இதயத்தில் ஈரமாக நிழலாடுகின்றன. அவர் எங்கள் கிராமத்திற்கு குளிக்க வந்தால் இளம் பெண்கள் கிண்டலாக சிரிப்பார்கள்.. அவரை சோப்பு சீப்பு கண்ணாடி என்று பட்டப் பெயர் சொல்லி நகைப்பார்கள்..

அவரை வெளியில் சொல்லாமலே காதலித்தவர்கள் எங்கள் ஊரில் ஏராளம்.. ஆம்! அச்சு அசலாக வாழ்வே மாயம் கமலஹாசன் போலவே இருப்பார். அதனால் தான் என்னவோ.. அவர் பேருந்து ஏற நின்றாலும் சரி! அவர் வேட்டியை லாவகமாக பிடித்து நடக்கும் நளினமாக இருந்தாலும் சரி! அது ஒருவிதமான ஈர்ப்பை பார்ப்போர்க்கு கொடுக்கும்!

மயிலாடுதுறை அருகிலுள்ள பூவாலை கிராமத்தில் பிறந்தவர் பூவைசாரதி! தமிழாசிரியர் பணிக்காக எங்கள் ஊரில் நிரந்தரமாக தங்கியவர். அவரே சமைப்பார்.. அவரே துவைப்பார்.. அவரின் பீர்க்காங்காய் சாம்பர் இன்னும் நாக்கில் இனிக்கிறது.

ஆசிரியர் பணி அவரின் உணவுக்காக; எழுத்துப் பணி அவரின் உணர்வுக்காக அவர் மட்டும் வடுவூர் பள்ளியில் இல்லாமல் பணியாற்றாமல் இருந்திருந்தால்.. என்னைப்போல் இன்னும் ஆயிரம் பேரை உருவாக்கி யிருப்பார்! பணி ஓய்வுக்காலம் முடிந்ததும் அவருக்கான காலம் உதயமாகும் என்று நான் நம்புகிறேன்! சிறந்த படிப்பாளி.. ஆழமான படைப்பாளி!

ஏதோ நான் கவிதைகள் எழுதுவதாய் எல்லோரும் பேசுகிறார்கள். அப்படி நான் எழுதும் எழுத்து எதாவது ஒன்றை செய்கிறதென்றால் அந்த எழுத்துக்கு விதை போட்டவர் ஆசான் சாரதிதான் என்று பெருமை யோடு சொல்வேன்!

விதையை விழுங்கி வானத்தில் பறக்கும் ஒரு பறவை அதன் வயிற்றில் ஒரு வனத்தை சுமக்கிறது! நானோ என் மனத்தில் தமிழ் இனத்தை சுமக்கிறேன்.. அது விடுதலையடைய அன்றாடம் கவிதையில் பிறக்கிறேன்.. திரைப்பாடல்களால் பறக்கிறேன்!

500 திரைப்படங்கள் / 700 பாடல்கள் / 27 நூல்கள் / ஓயாது உழைக்கிறேன். இந்த பணிகளுக்கெல்லாம் அன்று ஏணி அமைத்தவர் என் தமிழாசான் பூவை சாரதி!

நான் அதிக வலிகளையும் - குறைந்த ஒளிகளையும் பெற்றவன்! இன்று மீண்டும் பிறந்ததாய் மகிழ்கிறேன்! ஏன் தெரியுமா? 26 ஆண்டுகள் முன்பு என் ஆசானுக்கு நான் விருதுகள் வென்று அவருக்கு சமர்ப்பித்தேன்.. இன்று இருவருமே ஒரே விருது பெற்று நிற்கிறோம்.. நாங்கள் யாரிடம் அதை சமர்ப்பிப்பது இருவரும் அதை தமிழ்த்தாய்க்கு சமர்ப்பித்துவிட்டோம்! ஏனென்றால் எல்லாம் தமிழ்க்கொடுத்தது!

என் ஆசானே! என்னை வடுவூர் நூலகத்திலேயே தூசி துடைக்க விட்டவனே.. நீ தூசி துடைக்க விட்ட நூல்களெல்லாம் என் நாசியில் ஏறி மூளையில் படிந்த விட்டது அதைதான் புரட்டி புரட்டி படிக்கிறேன் நான்! ஆசானே..உங்களைப் பற்றி இன்னும் நிறைய எழுதுவேன்.. கொஞ்சம் மிச்சம் இருக்கட்டும் ஒரு விருதுக்கே அனைத்தையும் விருந்து வைத்திட விரும் பவில்லை.

என் விழுதுகள் கொஞ்சகாலமாகத்தான் வேர்விட தொடங்கியிருக்கிறது.. இன்னும் பல விருதுகள் பெறுவேன்.. மீண்டும் மீண்டும் உங்களையே எழுது வேன்!

இன்று உவமைக்கவிஞர் சுரதா நூற்றாண்டு விழாவில் சுரதா விருது பெற்ற தமிழறிஞர் பூவை சாரதிக்கும், அவரின் பள்ளி மாணவர் கவிபாஸ்கருக்கும் என் ஈரமான வாழ்த்துகள்!

இப்படிக்கு
**கவிபாஸ்கரின் நினைவுகள்**

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**

# தமிழ்க் கலை இலக்கியப் பேரவை
## தமிழ்க் கல்விக்கூடம் - குறோளி இலண்டன்

இணைந்து நடத்தும்





### கல்வியில் சிறந்த நாடுகளில்
# தாய்மொழிக் கல்வி
### இணையவழி கருத்தரங்கம்

**20.12.2020 ஞாயிறு**
**மாலை 6.00 மணிக்கு**
**இலண்டன் நேரம் : 12.30 மணி**

இணையம் வழி இணைய
https://meet.google.com/zpo-empr-euy



**வரவேற்புரை :** பாவலர் **முழுநிலவன்** பொதுச்செயலாளர், த.க.இ.பே.

**தலைமை :** பாவலர் **கவிபாஸ்கர்** தலைவர், த.க.இ.பே.



### குழந்தை மைய தாய்மொழிக் கல்வி
தமிழ்த்திரு. **இராசரத்தினம்**
அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடம், நிர்வாகக்குழு உறுப்பினர், நோர்வே



### பன்மொழி நாட்டில் தாய்மொழிக்கல்வி
முனைவர் **விஜய் அசோகன்**
ஆராய்ச்சியாளர், சால்மர்ஸ் பல்கலைக்கழகம், சுவீடன்

### ஆளுமை வளர்க்கும் தாய்மொழிக்கல்வி
தமிழ்த்திரு. **நிரோஜன் சிவானந்தன்**
கமேன் பல்கலைக்கழகம், பின்லாந்து



### தாய்மொழிக் கல்வியின் தற்காப்பு அரசியல்
பேராசிரியர் கலாநிதி **சிதம்பரநாதன்** - யாழ்ப்பாணம்



### அறிவியல் வளர்ச்சிக்கு தாய்மொழிக் கல்வியே
பொறியிலாளர் **இங்கர்சால் செல்வராசா** தமிழ் ஆய்வாளர், நோர்வே

**நன்றியுரை :** திரு. **செ.சிவசீலன்**
இயக்குநர், தமிழ்க் கல்விக்கூடம் - குறோளி, இலண்டன்

**தமிழ்க் கலை இலக்கியப் பேரவை**
தொடர்புக்கு : 98419 49462 / 98416 04017
**தமிழ்க் கல்விக்கூடம் - குறோளி**
+447367395859 @TLCC2006

**நிகழ்வை காண :**
கண்ணோட்டம் www.kannottam.com வலையொலியில்...
LIVE முகநூல் நேரலையில்...

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

